பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 21 புதன்கிழமை (04.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :159



## காயமடைந்த பெண் போராளிகளுக்கான இல்லம் தலைவர் பிரபாவால் திறந்துவைப்பு

கிளிநொச்சி,மே 4

போரின்போது விழுப்புண் அடைந்த பெண் போராளிகளுக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டாம் லெப்டினன்ட் மயூரி நினைவில்லத்தின் பெயர்ப் பலகையை நேற்று மாலை தலைவர் பிரபாகரன் திரைநீக்கம் செய்து புதிய கட்டடத்தையும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாகப் பொதுச் சுடரினைத் தமிழீழத் தேசியத் தலைவர் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார். இரண்டாம் லெப்டினன்ட் மயூரியின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஈகைச்சுடரை ஏற்றிவைக்க, மாவீரர் மயூரியின் சகோதரர் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவில்லத்தை அன்பளிப்பாக நிர்மாணித்துத்தந்த கிளிநொச்சியைச் சேர்ந்த சியாமளாவின் தந்தை அமரர் கந்தசாமியின் நினைவுக் கல்வெட்டினை அவரது மகன் வரதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து மயூரி நினைவில்லத்தின் கட்டடத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். விழுப்புண் அடைந்த போராளி செல்வி பாடினி அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இந்த நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் மற்றும் விழுப்புண் அடைந்த போராளிகள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் நன்றியுரையினை மயூரி நினைவில்லப் போராளி வேணி அவர்கள் நிகழ்த்தினார்.

(க-3)

# எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் பொதுக் கட்டமைப்பு ஏற்படும்!

## ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு,மே 4

**“தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்க வேண்டுமானால், ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்தியாக வேண்டும். யார் எதிர்த்தாலும் இதனைச் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நான் இதனைச் செய்தே தீருவேன். அதனால் நாட்டின் இறைமைக்கும், ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாது.”**

**- இப்படி அடித்துக் கூறிவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலின் சமய, சமூகத் தலைவர்களுக்கான கூட்டம் நேற்றுப் பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ன ஆகியோரும் சர்வமதத் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது:- ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு

ஏறாவூர், மே4

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடந்த இளைஞனின் சடலம் ஒன்றை மட்டக்களப்பு ஏறாவூர்ப் பொலீஸார் மீட்டுள்ளனர். கிரான் - கோரா கள்ளிமடு பிரதான வீதியருகே இந்தச் சடலம் காணப்பட்டுள்ளது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞனின் சடலம் இதுவரை அடையாளங் காணப்படவில்லை என்று நேற்றுப் பகல் பொலீஸார் தெரிவித்தனர்.

ரீ-சேட்டும் சாரமும் அணிந்தநிலையில் காணப்படும் சடலத்தின் தலையிலும் மார்புப் பகுதியிலும் துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் மீட்பு!

### நல்லூர் மருதடி வீதிப் பகுதியில்

யாழ்ப்பாணம், மே 4

நல்லூர் மருதடி வீதியிலுள்ள ஒழுங்கை ஒன்றிலிருந்து பலத்த வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவருடைய சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

இதனால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

நல்லூர் மருதடி வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய மவுன்பேட் கமில்டன் என்பவருடைய சடலமே இவ்வாறு மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் கொலையைக் கண்டித்து கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

### சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் திரண்டனர்

பிரபல ஊடகவியலாளர், மாமனிதர் தர்மரத்தினம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டில் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்றுமாலை பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் நானூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

பெரும்பான்மையான சிங்கள ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், தொழிற்சங்கவாதிகள், கலைஞர்கள் என்று பல தரப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்னதாக எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்திய பின்னர் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை

(16ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை புலிகளின் அலுவலகம் மீது திங்கள் இரவு கிரனேட் வீச்சு; துப்பாக்கிச் சூடு!

ஏறாவூர், மே 4

வாழைச்சேனை - காளிகோவில் வீதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேச அரசியல்துறைப் பணிமனை நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளது.

இரவு 8.30 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். சுமார் 15 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட இனந்தெரியாத நபர்கள் அரசியல்துறைப் பணிமனையைச் சுற்றிவளைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதும் இன்று 4 மணிநேர மின்தடை!

### தொழிற் சங்கங்களின் போராட்டத்தால்

கொழும்பு.மே 4

நாடுமுழுவதும் இன்று நண்பகல் முதல் 4 மணிநேர மின்தடை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரசுக்கு எதிராக மின்சார சபை ஊழியர்கள் மேற்கொள்ள உள்ள அடையாள வேலைநிறுத்தத்தால் இந்தநிலை உருவாகும்.

நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இந்த மின்தடை இருக்கும் என மின்சார சபை தொழிற்சங்க வட்டாரங்களில் இருந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்று அதிகாலை நல்லூர், மருதடி வீதிப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தையும், யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மற்றும் பொலீஸார் அங்கு விசாரணைகளை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# சாதித்துவத்தை ஓரங்கட்டி சமூகத்தை இணைத்தவர்கள் விடுதலைப் புலிகளே!

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை புகழாரம்

யாழ்ப்பாணம்,மே 4

சாதித்துவத்தை ஓரங்கட்டி சமூகத்தை ஒன்றிணைத்து அதன்மூலம் வறுமையினை ஒழித்தவர்கள் விடுதலைப் புலிகளே.

- இவ்வாறு புகழாரம் சூட்டினார் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை.

நேற்று;முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற வறுமை ஒழித்தல் தொடர்பான ஆய்வரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அன்றொரு காலத்தில் சமூகத்தில் அடக்குமுறைகளும், சாதித்துவமும் தலைதூக்கி நின்றன.

பாடசாலையில் கல்வி கற்பது தொடக்கம், ஆலய வழிபாட்டில் ஈடுபடுவது வரைக்கும் சாதித்துவம் மேலோங்கிக் காணப்பட்டது.

இதனால், அடக்கப்பட்ட சமூகத்தின் மத்தியில் வறுமை பரந்து காணப்பட்டது. இந்த நிலையினைத் தகர்த்தெறிவதற்குச் சாதித்துவத்தை ஓரங்கட்டி - சமூகத்தை ஓரணியில் திரட்டி - ஒன்றுபட்ட சமூகமாக மாற்றி - வறுமையின் பிடியிலிருந்து அவர்களை நீக்கியதுடன், பொருளாதாரக் கட்டமைப்பிலும் மக்கள் மீட்சிபெற வழிசமைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே.

இது என்னைப் பொறுத்தவரை புலிகள் சமூகக் கட்டமைப்பில் செய்துகொண்ட சாதனை என்றுதான் சொல்ல வேண்டும் - என்றார்.

இந்த ஆய்வரங்கில் 'வறுமை ஒழிப்புத் தொடர்பாக மக்களின் நிலைப்பாடும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்' எனும் தலைப்பில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பொ.விக்னேஸ்வரனும், 'வறுமை ஒழிப்புக் கோட்பாடும் அதனை அடைவதற்கான உபாயங்களும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் வி.நித்தியானந்தனும், 'புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி ஊடாக வறுமை ஒழிப்பதில் அரச நிர்வாகத்தின் பங்கும் அதன் செயற்பாடும்' எனும் தலைப்பில் 'நியாப்' திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணனும் உரை நிகழ்த்தினார்கள்.

பிரதேச செயலர்கள், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-13)

# கலை இலக்கிய விழா பிற்போடப்பட்டது

கரவெட்டி,மே 4

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் இன்றும் நாளையும் நடத்தப்படவிருந்த தேசிய கலை, இலக்கியப் பெருவிழா போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் யாவும் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் எனவும் -

இப்பெருவிழாப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுதிகதி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவும் கரவெட் டிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (த-70-203)

# பட்டப்பின் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மறைமாவட்டத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்படவுள்ள உயர்கல்விக் கழகத்தில் ஆங்கிலமொழி மூல பட்டப்பின் படிப்பைத் தொடரவிரும்புவோர் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி டிப்ளோமா கற்கை நெறி இம்மாதம் ஆரம்பமாகவுள்ளது. கற்கை நெறியின் முடிவில் அரச அங்கீகாரத்துடனான டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும் எனவும் - இதில் பயிலவிரும்புவோர் யாழ். மறைக் கல்வி நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# அரச படைகளின் உரிமை மீறல்களை அம்பலப்படுத்தியவர் மாமனிதர் சிவராம்

## தமிழ்க்கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு அனுதாபம்

அரச படைகள் மேற்கொண்டுவந்த மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர் மாமனிதர் சிவராம்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் கொலைக்குக் கண்டனம் தெரிவித்து தமிழ்க்கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு விடுத்திருக்கும் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி வெளிவிவகாரக் குழு சார்பாகத் தற்போது ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகத் தமிழர் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவருகின்ற தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிப்படுத்துவதில் அயராது உழைத்தவர் சிவராம்.

தமிழ் மக்களுக்கு எதிராகச் சிங்களப் பேரினவாத அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களைத் தனது எழுத்துக்கள் ஊடாகத் தமிழ், ஆங்கில ஊடகங்கள் மூலம் வெளி உலகுக்கு அம்பலப்படுத்துவதில் முன்நின்று உழைத்தவர்.

இணைந்த வடக்கு - கிழக்குத் தாயகத்திலேயே தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழமுடியும் என்று திடமாக நம்பியதுடன், அதன் ஒருமைப்பாட்டிற்காக உறுதியோடும் துணிவோடும் செயற்பட்டவர்.

இவரது கொலையின் மூலம் தமிழ்த் தேசியத்திற்கான குரலை அடங்கி நசுக்கிவிடலாம் என அரசு முயல்கிறது.

இக்கொலையானது ஜனநாயகத்திற்கும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். மாற்றுக் கருத்துக்களுக்குப் பதிலளிக்கத் தெரியாத - கருத்துக்களைக் கருத்துக்களால் வெல்லமுடியாத - கோழைகளே இக்கொலையினைச் செய்துள்ளனர்.

இக்கொலையின் மூலம் மாமனிதர் சிவராம் போன்று தமிழ்த்தேசியத்திற்காகக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களை அடக்கி ஒடுக்கிவிடலாம் என்று நினைத்தால் அது அவர்களின் பலவீனமே. சிவராம் கொலைசெய்யப்பட்ட பின்னர் அவரது உடல் நாடாளுமன்றத்தின் உயர் பாதுகாப்பு வயைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இது தமிழ்த்தேசியத்திற்காகக் குரல்கொடுக்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடப்பட்ட அச்சுறுத்தலாகும்.

இப்பகுதி மிகவும் உயர்பாதுகாப்புப் பகுதியாகவிருந்தும், இப்பிரதேசத்தில் சடலம் போடப்பட்டுள்ளது என்றால் அரசினதும் அதனது புலனாய்வுத் துறையினதும் பூரண ஆதரவின்றி நடைபெற்றிருக்கமுடியாது.

அந்தவகையில், இக்கொலையினை ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தேசவிரோத சக்திகளும் இணைந்தே மேற்கொண்டிருக்கின்றன என்ற சந்தேகம் எழுகின்றது.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் நடைபெற்ற இக்கொலைக்கு ஜனாதிபதியும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான கோழைத்தனமான கொலைகள் இடம்பெறுவதையும் தடுத்துநிறுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இக்கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் நீதிக்கு முன்னால் கொண்டுவந்து தண்டிக்கப்படவேண்டும்.

சிவராமின் மறைவால் துன்புற்றிருக்கும் அவரது மனைவி, குழந்தைகள், உறவினர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சிவராம் கொலைக்கு அரசே பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் வலியுறுத்து

பத்திரிகையாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்டமைக்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன இதனை வலியுறுத்தினார். சிவராம் கொலை தொடர்பாக ராஜித எம்.பி. மேலும் கூறியதாவது:-

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சிவராமின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கடத்தல் இடம்பெற்றவிதம் சந்தேகத்தையே தருகிறது. எனவே, ஊடகச் சுதந்திரத்தைக் கட்டிப் போடும் வகையில் இடம்பெறும் இவ்வாறான சம்பவங்களுக்கு அரசே பதில் கூறவேண்டும்; இதனை அரசே பொறுப்பேற்க வேண்டும்.

### மக்கள் கூட்டம்

கடந்த மேதினக் கூட்டத்தின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் ஐ.தே.க. கூட்டத்தில் கலந்துகொண்டனர். இது எமக்குக் கிடைத்த வெற்றியாகும். அரசின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பையே இது காட்டுகிறது. மக்களின் இந்த நிலையை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழேயே மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

-இவ்வாறு ராஜித சேனாரட்ன எம்.பி. மேலும் குறிப்பிட்டார். ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கரமினி லொக்குகேயும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டார். (த-க)

# எனது செயற்றிட்டங்களில் தலையிடாதீர்; பிரதமருக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

தமது பணிப்புரையின் பேரில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலையிடக்கூடாதென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது, பாடசாலை அதிபர்கள் மீது எடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகள் குறித்துப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தார். இதனையடுத்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது என்று கூறப்பட்டது.

இந்நிலையில், ஓரிரு தினங்களுக்கு முன்னர் பிரதமரின் செயலாளர் ஒருவருடன் தொலைபேசியூடாக உரையாடிய ஜனாதிபதி, தமது பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பிரதமர் அலுவலகம் தலையிடக்கூடாதென்று அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவுறுத்தல் பிரதமருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-க)

# ஆளும் வர்க்க சக்திகளின் கோழைத்தனச் செயற்பாடு

## புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்த்து நிற்கத் தெரியாத ஆளும் வர்க்கத்தினர் இனங்காட்டாத கொலைகளில் இறங்கியிருக்கின்றனர். அந்த வகையில்தான் ஊடகவியலாளர் சிவராமும் கொலைசெய்யப்பட்டிருக்கின்றார்.

மாமனிதர் சிவராமின் படுகொலையைக் கண்டித்துப் புதிய ஜனநாயகக் கட்சி வெளியிட்டிருந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

ஊடகவியலாளர் டி.சிவராம் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட நிகழ்வு ஒரு தனிநபரை இல்லாதொழிப்பதற்கான முயற்சி மட்டுமல்ல, கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை என்பவற்றை அடக்கி ஒடுக்குவதற்காக வைக்கப்பட்ட வேட்டுக்களுமாகும்.

- இவ்வாறு ஊடகவியலாளர்கள் திட்டமிட்டே குறிவைத்துக் கொல்லப்பட்டு வந்தமை இலங்கையில், குறிப்பாக வடக்கு-கிழக்கில் தொடரும் நிகழ்வாக நீடித்துச்செல்கின்றது. இத்தகைய கொலைக் கலாசாரத்தை எமது கட்சி எப்போதும் கண்டித்து எதிர்த்துவந்துள்ளது. அந்தவகையில், டி.சிவராமின் படுகொலையைப் புதிய ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி, பரந்துபட்ட மக்களும் இவ்வாறான கொலைகளை எதிர்த்துக்குரல் கொடுத்துப் போராடவேண்டும்.

ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை என ஆளும் வர்க்கத்தினர் நாளாந்தம் உச்சரித்து வரும் இந்நாட்டில், தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுவருகிறார்கள். இனங்காட்டாத வகையில் இடம்பெறும் இக்கொடூரக் கொலைகள் பழி தீர்த்துக்கொள்ளும் வகையில் கோழைத்தனமாகவே செய்யப்படுகின்றன.

கொலைசெய்யப்பட்ட டி.சிவராம் நாடறிந்த ஒரு பத்திரிகையாளர். அவர் தமிழ் மக்களது போராட்டத்தைத் தனது கருத்து நிலைநின்று ஆதரித்து எழுதி வந்த ஒருவர். அவரது கருத்துக்கள், எழுத்துக்கள் பற்றிச் சர்ச்சைகளும் முரண்பாடுகளும் இருந்துவந்துள்ளன. அவை கருத்துக்களாலும் எழுத்துக்களாலும் மறுக்கப்படவோ எதிர்க்கப்படவோ வேண்டுமே அன்றி, துப்பாக்கி வேட்டுக்களால் அல்ல. ஆளும் வர்க்க சத்திகள் அவ்வாறு எதிர்க்க முடியாத சூழலிலேயே இவ்வாறான இனங்காட்டாத கொலைகளில் இறங்கி கோழைத்தனமாகப் பழிதீர்த்துக்கொள்கின்றனர். ஆளும் ஐ.ம.சு. முன்னணி அரசு டி.சிவராமின் படுகொலைக்கு உரிய பதில் வழங்கியே தீரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மன்னருக்கு எதிராக நேபாளத்தில் ஆர்ப்பாட்டம்

காத்மண்டு, மே4

நேபாளத்தில் ஆட்சியை மறுபடியும் ஜனநாயக முறைக்குக் கொண்டுவருமாறு கோரியும் ஊடக சுதந்திரத்தை மீள வழங்குமாறு கோரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் நேற்றுத் தலைநகர் காத்மண்டுவில் பேரணியொன்றை நடத்தினர்.

சர்வதேச ஊடகவியலாளர் தினமான நேற்று தமது உரிமைகளை வழங்குமாறு கோரியே ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மேற்படி பேரணியை நடத்தினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மன்னர் ஜியானேந்திரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் ஊடகவியலாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன், பத்திரிகைத் தணிக்கை - தடை என்பன அமுல்செய்யப்பட்டன.

அண்மையில் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட அவசரகால நிலை ரத்துச்செய்யப்பட்ட பின்னரும் மன்னரின் கெடுபிடிகள் குறையவில்லை.

இந்நிலையில் மன்னர் ஜியானேந்திராவின் ஆட்சிக்கு எதிரான ஊடகவியலாளர்கள் மேற்கொண்டுள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் விளைவுகள் எவ்வாறு இருக்குமோ எனத் தெரியவில்லை என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நேபாளில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் தினந்தோறும் அதிகரித்து வருகின்றன என சர்வதேச ஊடகமான 'வொட்ச் டோக்' தெரிவித்துள்ளது.

மன்னர் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின்னர் நேபாளில் இயங்கிவந்த ஏராளமான தனியார் ஊடகங்கள், பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டன. அரச ஊடகங்கள் மட்டுமே இயங்கிவந்தன.

நேபாளில் பத்திரிகைத்துறை இன்னும் மன்னருடைய கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. மேலும் பிரதமர் ஆட்சி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 400 ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)



# அமெ. இராணுவ விமானங்கள் ஈராக்கில் காணாமற்போயின

பக்தாத்,மே4


அமெரிக்கப் படையினர் காணாமற்போனதாகக் கூறப்படும் எப்.ஏ.18 ரக ஜெட் விமானங்களில் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. மற்றைய ஜெட் விமானம் காணாமற்போயுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று இரவு வானில் பறந்துகொண்டிருந்த விமானங்களே ரடார் கருவியின் பதிவிலிருந்து தவறியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயரத்தில் பறந்துகொண்டிருந்த மேற்படி விமானத்தை தீவிரவாதிகள் சுட்டுவீழ்த்தியிருக்கலாம்.

சிலவேளைகளில் மற்றைய விமானமும் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்குச் சொந்தமான அமெரிக்கன் எப்.ஏ.18 ஹொர்னெட் ரக விமானம் இரண்டு காணாமற்போயுள்ளன என அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.


எப்.ஏ.18 ரக ஜெட் விமானம்.

அமெரிக்கப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கிவந்த மேற்படி விமானங்கள் இரண்டும் தொடர்புகளை இழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. வெவ்வேறு திசைகளில் மேற்படி விமானங்கள் இரண்டும் பறந்துகொண்டிருந்தன என்றும் -

ஒரு விமானத்தில் விமானி மட்டுமே இருந்தார். மற்றைய விமானத்தில் இரு விமானப் படை அங்கத்தினர்களும் விமானியும் இருந்தனர் என்றும் -

இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சிலவேளைகளில் ஈராக்கில் காணப்படும் மோசமான காலநிலை காரணமாக நடுவானில் ஒன்றுடன்ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்றும் -

அல்லது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்றும் -

அதிகாரியொருவர் கருத்துத் தெரிவித்தார். (க-8)

# திருப்பத்தூரில் 25 கிலோ எடையில் பனிமழை

திருப்பத்தூர்,மே4

இந்திய தமிழ்நாட்டின் திருப்பத்தூர் பகுதியில் நேற்றுமுன்தினம் 3.30 மணியளவில் ஏற்பட்ட கடும் சூறாவளியுடனான மழையின் போது 25 கிலோ எடையுள்ள பனிக்கட்டிகள் விழுந்தன என தமிழ்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் அந்தப் பகுதி முழுவதும் பனிக்கட்டிகள் விழுந்து பனிமலைபோன்று காட்சியளித்தது என்றும் -

இதுபோன்று பனிக்கட்டி மழை இதற்கு முன்னர் பெய்ததில்லை என்றும் மக்கள் ஆச்சரியம் தெரிவித்தனர்.

பனிக்கட்டிகள் விழுந்த பகுதிகள் வெறும் நிலமாக மட்டுமே இருந்ததினால் பொருள் மற்றும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# எதியோப்பியாவில் வெள்ளம் 134 பேர் பரிதாப உயிரிழப்பு!

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் தென்கிழக்கு பகுதியிலுள்ள வாபேஷெபெல்லே ஆறு பெருக்கெடுத்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 134 பேர் உயிரிழந்தனர். பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் வீடுகளை இழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆற்றில் அதிகளவு முதலைகள் இருக்கின்றன. முதலைகள் கடித்து சாப்பிட்டதாலேயே அதிகளவு மக்கள் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி முதல் பெருக்கெடுத்துள்ள இந்த வெள்ளத்தினால் எதியோப்பிய மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளத்தில் முதலைகள் இருப்பதனால் பாதுகாப்பான வேறிடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள், தமது இருப்பிடங்களுக்கு மீண்டும் செல்லமுடியாது அவதியுறுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப்பணிக்குழு தீவிரமீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த போதிலும் மக்களை உயிருடன் மீட்டெடுப்பது சிரமமாக உள்ளதென செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடிய நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் மக்களின் நிலைமைகள் கவலைக்கிடமாகவே உள்ளன என செஞ்சிலுவைச் சங்கம் மேலும் தெரிவித்தது.

இந்த வெள்ளம் காரணமாக சோமாளியாவில் பெரும் பகுதியும், யேமன் நாட்டின் ஒரு பகுதியும் சேதமடைந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

# ஆயுதக் குவியல் வெடித்ததில் 29 பேர் பரிதாப உயிரிழப்பு!

காபூல்,மே4

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்கு வடக்கேயுள்ள பாஷ்கா எனப்படும் கிராமத்தில் சட்டவிரோதமாக புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் வெடித்துச் சிதறியதில் 28 பேர் உயிரிழந்தனர். 70 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பல வீடுகள், பள்ளிவாசல்கள் என்பன பலத்த சேதமடைந்தன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆயுதக்குழுவொன்றின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் வீட்டு வாசலிலேயே மேற்படி ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருந்தன என ஆப்கான் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

அதிகமானவர்கள் பலத்த காயமடைந்துள்ளனர். எனவே, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகலாம் என்றும் -

இந்த ஆயுதங்கள் 1980ஆம் ஆண்டு ரஷ்யப் படையினர் ஆப்கானை ஆக்கிரமித்தபோது புதைக்கப்பட்டவையாக இருக்கலாம் என்றும் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திடீரென இந்த ஆயுதக் குவியல் வெடித்துச் சிதறியமைக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதற்கான விசாரணைகள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என உள்நாட்டு உள்விவகார அமைச்சக அதிகாரி லட்புல்லா மாஷல் கூறினார். (க-8)

# கனடா ஆளும்கட்சியைக் கவிழ்க்க பிரதான எதிர்க்கட்சி திட்டம்

லண்டன்,மே4

கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ கட்சி போதிய பெரும்பான்மை இல்லாத லிபரல் கட்சி தலைமையிலான அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பான விவகாரம் பொதுமக்கள் மத்தியல் ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதென எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

கூடிய விரைவில் தேர்தலை நடத்துமாறு நிர்ப்பந்தித்தும், -

தேர்தலின் மூலம் ஆளும்கட்சியைக் கவிழ்ப்பது எனவும் கொன்சர்வேட்டிவ் கட்சி திட்டமிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் நடத்திய கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. (க-8)






# விபத்துக்குள்ளான ஊடகவியலாளர்களுக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் அனுதாபம்



ஊடகத்துறையில் உரிய முறையில் செயற்பட்டபோது பல்வேறு விபத்துக்குள்ளான ஊடகவியலாளர்களுக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவிக்கிறார் என ஐநா.சபை செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகவியலாளர் தினமான நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது:-

ஊடகவியலாளர்கள் கடமையை நேர்மையான முறையில் செயலாற்றக்காட்டும் ஆர்வமும் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்கது.

தடைவிதிப்பது, தகவல்களை வழங்குவதைத் தடுத்தல், தகவல்கள் வழங்குவதில் தலையிடுதல், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்களாகும்.

இவ்வறான செயற்பாடுகள் அபிவிருத்திக்கு தடையாக அமைவதுடன் சகலருடைய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல்களாகும். இன்றைய சர்வதேச ஊடகத்தினத்தில் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக சர்வதேச சமூகம் கவனம் செலுத்தவேண்டும் - என்று அவர் கூறினார்.

# ஜப்பானில் தொடர் நில அதிர்வு

டோக்கியோ,மே4

ஜப்பானில் நேற்றுமுன்தினம் அதிகாலை அடுத்தடுத்து ஐந்து நில அதிர்வுகள் ஏற்பட்டதென நிலநடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் தெற்கிலுள்ள கொய்சுமிதீவில் அதிகாலை 1.30 மணியளவில் முதலாவது நில அதிர்வு ஏற்பட்டது என்றும் -

அந்த நில அதிர்வு ரிச்டர் அளவு கோலில் 4.9 புள்ளியாகப் பதிவாகியிருந்தது என்றும் அதனைத் தொடர்ந்து குறைந்த நேர இடைவெளிகளில் அடுத்தடுத்து 4 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஜப்பானின் புகுவோகா பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வின் தொடர் நிகழ்வாகவே இந்த நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தொடர் நில அதிர்வினால் வீடுகளும், கட்டடங்களும் அதிர்ந்தன. இதனால், மக்கள் பீதியின் காரணமாக பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6030383 முதல் 6042770 வரை

சீட்டிழுப்பு இல. 130 திகதி 02-5-2005

வெற்றி எண்கள் **3 9 6 1 0 2** சுப்பர் எண் **19**

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,47,00,300/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,47,00,300/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 101 | 5,000/- | 5,05,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,089 | 500/- | 5,44,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,845 | 50/- | 5,42,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,07,443 | 10/- | 10,74,430/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 1,10,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,087 | 100/- | 1,08,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,757 | 20/- | 2,15,140/- |
| மொத்தம் | 131,461 | | 52,97,620/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 52,97,620/-

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **2,50,01,775/-**

6036959-5-32
6041174-5-03
6035149-5-82
6031104-2-52
6035617-7-84
6036309-7-90
6031167-8-49
6030986-2-37

அபிவிருத்தி லொத்தர் சபை


# தாதியர் பயிற்சிக்கு சமுகமளிக்காதோரை தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே4

தாதியர் பயிற்சி நெறிக்குத் தெரிவாகி இது வரை தாதியர் பயிற்சிப் பாடசாலைக்குச் சமுகம் அளிக்காதவர்களை மேற்படி பாடசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ந.தர்மினி (கொழும்பு), என்.சிவரூபி (வரணி), எஸ்.சிந்துஜா (வியாபாரி மூலை, பருத்தித் துறை), எஸ்.மலைமகள் (நீலியம்பனை, மல்லாகம்), சுவர்ணா தியாகராஜா (அச்செழு, நீர்வேலி), என்.தியாகநிதி (நீராவியடி), ஏ.எம்.மனோரஞ்சினி (சித்தன்கேணி), எஸ்.கோகிலா (அல்வாய்), ரி.சசிலேகா (சுழிபுரம் மேற்கு), மரில்டா ஜோசப் (கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை).

ரி.தட்சாயினி (வவுனியா), யு.மேனகாதேவி (வவுனியா), கே.ஜசிந்தா (புதுக்குடியிருப்பு, முலலைத்தீவு), எஸ்.அகிலஜா (மன்னார்), பி.தர்சினி (வவுனியா), சி.பி.ஜெ.எம்.நிலானி (மன்னார்) ஆகியோரை தாதியர் பயிற்சிப் பாடசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (8-202)


**மாபெரும் கருத்தரங்கு**

மாகாண பொதுச்சேவை போட்டிப் பரீட்சைக்கான மாபெரும் கருத்தரங்கு 07.05.05 (சனி) காலை 8.30 - 11.30

கையேடு இலவசம்

ஆசிரியர்:
P.உமாசங்கர்
சயன்ஸ் அக்டமி
நல்லூர். (44951)(21)


## நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு பிரயாணப் படி

மண்டைதீவு, மே4

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு பிரயாணப்படி வழங்கப்படவுள்ளதாக சமூக சேவைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா பிரயாணப்படியாக வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் இந்த உத்தியோகத்தர்கள் சுனாமி அனர்த்தப்பணி காரணமாக மாவட்ட இணைப்பாளருடனும இணைந்து செயற்பட வேண்டி இருப்பதனாலேயே இந்தப்படி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (8-88)

## வலி.மேற்கில் 3 குளங்கள் புனரமைக்கப்படும்

வலி.மேற்கு,மே4

நாடு பூராகவும் ஆயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

சுழிபுரம் நளவராயன்குளம், பனிப்புலம் ஆராட்சி வெட்டைக்குளம், அராலி குமுக்கன் குளம் ஆகிய மூன்று குளங்களுமே புனரமைக்கப்படவுள்ளன.

இக்குளங்களின் புனரமைப்புக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை தொல்புரம் கமநல சேவை நிலையமும் வலி.மேற்குப் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியும் மேற்கொண்டுள்ளன. (8-175)

## கரை வலைத் தொழில் மீண்டும் ஆரம்பம்

செம்பியன்பற்று,மே4

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் கடல் நீரேரியில் கரை வலைத் தொழில் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இவர்கள் இப்போது தமது தொழிலை மீள ஆரம்பித்துள்ளனர்.

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, வன்னிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே குடில் அமைத்துக் கரை வலைத் தொழிலினை ஆரம்பித்துள்ளனர். (8-36)


நீர்வேலி, கோப்பாய், கரந்தன், உரும்பிராய் கிழக்கு

அருள்மிகு மனோன்மணி சமேத சிவபூதநாதேஸ்வரசுவாமி கோயில்

**புதிய சப்பர வெள்ளோட்டம்**

இன்று (04-05-2005) புதன்கிழமை
முற்பகல் 11மணிக்கு



திருநெல்வேலி ஸ்ரீவாணன் சிற்பாலய ஸ்தாபகர் திரு.செ.கந்தசாமி ஆச்சாரியாரின் பிரதம சிஷ்யனும் உடுவில் காளி கோயிலடியைச் சேர்ந்த 'சிற்பாச்சாரிய திலகம்' திரு.தம்பிஐயா குகதாசனும் அவரது குழுவினரும் உருவாக்கிய **புதிய சப்பர வெள்ளோட்டம்** நடைபெறும்.

வர்ண அமைப்பு: ஓவியத் திலகம் கிரிதரன், நாச்சிமார் கோயிலடி, வண்ணார்பண்ணை.

சப்பரத் திருவிழா உபயகாரர் - திரு.க.யோகநாதன், திரு.க.சந்திரசேகரம்.

(44956)(26-18-16)



@IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@ IT@

நாளை முதல் யாழ் மண்ணில்
தரமான கணினிக் கல்விக்கு
[05.05.2005]

**IT@ TECHNOMA**
COMPUTER INSTITUTE

*No : 15 Station Road Kokuvil*
(கொக்குவில் இந்துஆரம்ப பாடசாலைக்கு முன்பாக)

E-Mail:it.technoma@gmall.com
T.P:0776286552

**WE TEACH YOU THE BEST**



**சிறுநீரகம் தேவை**

ஜேர்மனியில் வசிக்கும் 18 வயதுள்ள இளம் பெண் ஒருவருக்கு உடல் உறுப்பின் முக்கிய பகுதியான சிறுநீரகம் தேவைப்படுகிறது. மனம்விரும்பி உதவ விரும்புவோர் T.P.: 077 6558747 எண்ணுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(44953)(26-18-16)



**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்**
**லியோ - இன்டறக் கழக** அனுசரணையுடன்
**பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**
**க.பொ.த.[உயர்தரம்] பொருளியல்**

காலம்: **04,05-05-2005 (புதன், வியாழன் - இன்றும் நாளையும்)**
நேரம்: **காலை 9.00 மணி முதல் பி.ப.2.00 மணி வரை**
இடம்: **யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

*வழங்குவோர்:*
1. **திரு.** V.P. **சிவநாதன்** (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
2. **திரு.**V.**கருணாகரன்** (யா/கனகரட்ணம் மகா வித்தியாலயம்)
3. **திரு.**R. **இராஜேஸ்வரன்** (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

*குறிப்பு:*
அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் சீருடையுடன் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(அ/42636)(42-18-16-26)

*விளம்பர அனுசரணை:* உதயன்



**Physics Group Class**
A/L 2007
செவ்வாய் சனி 4 p.m. - 6p.m.
இடம்: 2/1, மருதடி லேன், நல்லூர் (பொஸ்கோ அருகில்).
(மாதத்தில் 16 மணித்தியால வகுப்பு)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 18 - 08 - 1933

இறப்பு 11 - 05 - 1999

**அமரர் சதாசிவம் சண்முகம்**

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்.சாவகச்சேரி இந்து.)*

ஆறாண்டு காலம் சென்றாலும்
ஆறாது எங்கள் துயர்!

மீசாலை மேற்கு,
மீசாலை. (44954)(32-18-16-26)

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பத்தினாதர் விக்டர் இம்மானுவேல்**
(அழகர்)



வளன்புரம், கொழும்புத்துறையைச் சேர்ந்த பத்தினாதர் விக்டர் இம்மானுவேல் (அழகர்) 02.05.2005 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*981/17, வளன்புரம், முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை.*

தகவல்:
திருமதி இ.எலிசபேத் வெற்றிசியா
(லில்லி - மனைவி).

(44941)(42-18-16-26)

**உதயன்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பொறுமையின் எல்லையில்....!

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானம் ஆகியன தொடர்பாக இலங்கை அரசுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விடயம் குறித்து இனிமேல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அலட்டிக்கொள்ளாது. அந்த விடயத்துக்காக அதிகம் மினக்கெடுவது அர்த்தமற்றது எனப் புலிகள் கருதுகின்றனர் என்று தெரியவந்திருக்கிறது.

ஆழிப்பேரலை தாக்கி ஆறுமாதங்கள் கடந்தாலும் பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்ற நிலைமை நீடிப்பதால் உருவாகிய எரிச்சலும், விரக்தியுமே புலிகளை இவ்வாறு முடிவு செய்யத் தூண்டியுள்ளன.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் திட்டவட்டமான-தீர்க்கமான - முடிவுகளை எடுப்பதற்கு அதிகாரமோ, வலுவோ, உறுதியான தீர்மானமோ இல்லாத சந்திரிகா அரசு, அவ்வப்போது வெறும் வாய்ச்சவடால் அறிவிப்புகளை விடுக்கின்றதே தவிர, பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கை எதையும் துணிந்து எடுப்பதாக இல்லை. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் வெறும் வாய்வீச்சாக -வாய்ப்பந்தலாக இருக்கின்றனவே தவிர - உருப்படியான செயற்பாட்டில் எதுவும் இல்லை என்பது சர்வதேசத்துக்குமே அம்பலமாகி விட்டது.

இதற்குப் பின்னரும் இந்த அரசுடன் பொதுக் கட்டமைப்பு என்ற விவகாரம் குறித்துப் பேசுவது, தென்னிலங்கை அரசு இது விடயத்தில் நடத்தும் அரசியல் பித்தலாட்டத்துக்கு உதவுவதாகவே அமையும் எனக் கருதியதால் 'பொதுக்கட்டமைப்பு அரசியல் பேரம்' என்ற கடையை மூடிக்கட்டிவிட்டு மறுவேலை பார்க்கத் தீர்மானித்திருக்கின்றார்கள் புலிகள்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஆழிப்பேரலைத் தாக்கம் ஏற்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் - கடந்த மாவீரர் தினத்தின்போது - விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறிய கருத்துகள் இங்கு கவனிக்கப்பட வேண்டியவையாகின்றன.

*"இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது. சிங்கள தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை; அதேசமயம் பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி, சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழ முடியாது.*

*"பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகள் உள்ளன. அந்த எல்லைக்கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகிறோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலம் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை''* - இப்படித் தெரிவித்திருந்தார் தலைவர் பிரபாகரன்.

ஆனால், இந்த உரை நிகழ்த்தி ஒரு மாதத்துக்குள் ஆழிப்பேரலை தாக்கி நாட்டின் வடக்கு - கிழக்கு, தெற்குப் பிரதேசக் கரையோரங்கள் பேரவலத்தைச் சந்தித்தன.

அதனால் ஏற்கனவே பொறுமையின் எல்லைக்கு வந்த தமிழர் தேசம், பொறுமையின் எல்லையை மேலும் நீடித்து பொறுமை காக்க வேண்டியதாயிற்று.

இப்போது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களும் இடைக்கால வாழ்வாதார வசதிகளுமின்றி, மீள்கட்டுமான நடவடிக்கைகளுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி அவலப்படும் பின்னணியிலேயே பொதுக் கட்டமைப்புக்குறித்து இனிமேலும் அலட்டிக்கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டுக்குப் புலிகள் வந்திருக்கின்றார்கள்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பொறுமையின் எல்லைக்குத் தமிழர் தேசம் வந்துவிட்டதையே புலிகளின் இந்த முடிவு காட்டுகின்றது. இது தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்குப் புரிந்தால் சரி.

# காணாமற்போனோரின் குடும்ப மேம்பாட்டிற்கு உதவுவதற்கென விசேட செயற்றிட்டம்

## யாழ்.செயலகம் நடைமுறைப்படுத்துகிறது

யாழ்ப்பாணம்.மே4

வடபகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் குடும்பங்களின் மேம்பாட்டிற்கு உதவுவதற்கென யாழ்.செயலகம் விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக காணாமற் போனோரின் குடும்பங்கள் இதுவரை பெற்ற உதவிகள், குடும்பத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

இந்த விவரம் திரட்டும் பணியை பிரதேச செயலகங்களூடாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனைத்து விவரங்களும் அடங்கிய விண்ணப்பங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர்களால் வழங்கப்படும் விவரங்களின்படி காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன. உதவிகள் குடும்பநிலைக்கேற்ப, அவர்களின் தேவைக்கேற்ப வழங்கப்படவுள்ளதாகவும், பெரும்பாலும் அடுத்தமாத முற்பகுதியில் இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் இத்திட்டத்திற்கு பொறுப்பான யாழ்.செயலகத்தின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (8-13)

# நான்கு முக்கிய தேர்தல்களை எதிர்கொள்வதற்கு தயாராகுமாறு தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்து

கொழும்பு.மே4

நடைபெறவுள்ள நான்கு தேர்தல்களுக்கு முகம் கொடுக்க ஆயத்தமாகுமாறு நாட்டிலுள்ள சகல பிரதித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பிலுள்ள தேர்தல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் வைத்தே தேர்தல் ஆணையாளர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி அமைப்புகள் தொடர்பான தேர்தல்களை மிக அண்மையில் நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதோடு அது தவிர்ந்த மேலும் மூன்று தேர்தல்களை நடத்தத் தயார் நிலையில் இருக்குமாறும் அக்கூட்டத்தில் வைத்து சகல பிரதித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவுறுத்தியதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது தயாரிக்கப்பட்டு வரும் 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலை அடுத்த மாத இறுதிக்குள் தயார் செய்து உறுதிப்படுத்துமாறும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய ஆலோசிக்கப்பட்டுள்ள நான்கு தேர்தல்களும் 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலுக்கு அமைவாக நடைபெறவுள்ளன. ஒரு வகையில் அது ஜனாதிபதித் தேர்தலொன்றாகவோ அல்லது பொதுத் தேர்லொன்றாகவோ இருக்கும் பட்சத்தில் அது தொடர்பாக சுமார் 100 கோடி ரூபாய்கள் வரையில் செலவாகுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (8-206)

# பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது

## நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு.மே4

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த விலை அதிகரிப்பு இவ்வாரத்தில் நடைமுறைப்படுத்தப்படலாம் எனவும் நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரவு செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் 35 டொலர்களாக இருந்த ஒரு பீப்பா மசகு எண்ணெய் இன்று 55 டொலர்கள் வரையில் உயர்ந்துள்ளமையாலேயே அத்தகைய நடவடிக்கை யொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், மண்ணெண்ணெய்க்கு தொடர்ந்தும் மானியம் வழங்கப்படும்.

மின்சாரசபையை மறுசீரமைப்பதன் மூலம் தற்போதுள்ளதை விட மின் அலகு ஒன்றுக்கு 3 ரூபா 16 சதம் குறைவான மின்கட்டணம் அறவிட முடியும். உலகிலேயே அதிகரித்த மின்கட்டண அறவீடுகள் இலங்கையிலே அறவிடப்படுகின்றன. அதுவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பின்னடையச் செய்துள்ளது.

உலக சந்தை விலைகளுக்கு ஏற்ப உள்நாட்டில் எரிபொருள் விலை அதிகரிப்பு மேற்கொள்ள நாம் விரும்பாத போதிலும் அவ்வாறான கட்டாயத் தேவை இப்போது உருவாகியுள்ளது.

இலாபமீட்டும் நோக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் எவரும் பணிகளிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் - என்றார். (8-206)

# மாகாண ஆளுநர் நாளை யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்.மே4

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ யாழ்.குடாநாட்டிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை வியாழக்கிழமை யாழ்.வருகிறார்.

விமானமூலம் பலாலிக்கு வரும் இவர் அன்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்.பொதுநூலகத்தில் அரச அதிகாரிகள், திணைக்கள உத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகின்றது. (8-7)

# காரைநகரின் பிரதான வீதிகளுக்கு மின்குமிழ்கள்

யாழ்ப்பாணம்.மே4

காரைநகரின் பிரதான வீதிகளுக்கு மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

லண்டனில் வாழும் காரைநகர் வாசிகளால் வழங்கப்பட்ட நிதி மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டு அவர்களின் உதவியுடன் இந்த மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இவ் வீதிகளில் அதிகாலை வேளைகளில் பஸ்ஸுக்காக காத்திருப்போர் இருட்டிலேயே நிற்க வேண்டிய நிலை இருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-202)

# ஹாட்லிக் கல்லூரி பரிசளிப்பு விழா

கரவெட்டி.மே4

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டு அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கலந்துகொள்கின்றார்.

மேற்படி, விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (8-70)

## நாளை

*சித்திரை 22*
*வியாழக்கிழமை*
*05.05.2005*
*திதி : துவாதசி*
*பிற்பகல் 04.45 வரை*
*நட்சத்திரம் : உத்தரட்டாதி*
*முன்னிரவு 07.24 வரை*
*பிரதோஷவிரதம்*
*சுபநேரம் : 07.26 - 08.56*
*ராகுகாலம் : 01.26 - 02.56*
*(யாவும் பழைய நேரப்படி)*

## சுனாமியால் பாதிப்புற்றோருக்கான

# ஆயிரம் நிரந்தர வீடுகளை 'கெயர்' நிறுவனம் அமைக்கும்

செம்பியன்பற்று.மே4

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு பிரதேச மக்களுக்கு 'கெயர்' நிறுவனம் 1000 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 284 வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 500 சதுரஅடி கொண்ட நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டத்தில் 'கெயர்' ஈடுபட்டுள்ளது.

வடமராட்சி தொண்டைமானாறு முதல் கற்கோவளம் வரையிலுள்ள 16 கிராமங்களில் முதுற்கட்டமாக வீடமைக்கும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. (8-36)

# உலக வங்கியின் உதவியுடன் வலி.மேற்கில் 70 வீடுகள்

வலி.மேற்கு.மே4

உலக வங்கியின் ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 70 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வலி.மேற்குப் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களான பல்லசுட்டி, செம்மணத்தி, முங்கோடை, ஊரத்தி, மூளாய் பிள்ளையார் கோயிலடி ஆகிய கிராமங்களிலேயே 70 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இக்கிராமங்களுக்குப் பிரதேச செயலாளரினால் அமைக்கப்பட்ட குழுக்கள் நேரடியாகச் சென்று மக்களின் குறைபாடுகளையும் நிலைமையையும் அறிந்து பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பணியினை மேற்கொண்டுள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் வறிய மக்கள் பெரிதும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-175)

## பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான

# நிரந்தர வீடமைக்கும் பணிகள் ஆரம்பமாகின

கரவெட்டி.மே.4

சுனாமியால் வீடுகளை இழந்த கடற்றொழிலாளர்களுக்கானநிரந்தர வீடமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொண்டைமானாறு முதல் மணற்காடு வரையிலான கரையோர கடற்றொழிலாளர்களுக்கான நிரந்தர வேலைகள் ஆரம்பமாகிவிட்டன என வடமராட்சி சுனாமி அனர்த்த புனர்வாழ்வுச் செயலகம் தெரிவித்தது.

மேலும் 200 மீற்றருக்கு அப்பால் 500 சதுர அடிகளையுடையதும் அனைத்து வசதிகளையும் கொண்டவையாக மேற்படி வீடுகள் அமையவுள்ளதாகவும், தற்போது 200 மீற்றருக்கு அப்பால் சொந்த நிலம் உள்ளவர்களுக்கு முதற் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், ஏனையோருக்கான வீடமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும், அனர்த்த புனர்வாழ்வுச் செயலகம் தெரிவித்தது.

முன்பள்ளிகளுக்கான கட்டட வேலைகளும் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-70)

## உதயவாக்கு

உன்னுடைய விருப்பங்கள் மகிழ்ச்சி தருவதில்லை, பிறர் உன்னை விரும்புதலே மகிழ்ச்சியை உண்டாக்கும்.

– பிளச்சர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

700 X Sony கையடக்க வீடியோ கமரா, Sharp VCD Set, 200w Sony Acd Vorkeman ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 6165717. (44914)

உங்களுக்கு நீரிழிவு வியாதியா? சிறுகுறிஞ் சாக்கன்று எம்மிடம் விற்பனைக்குண்டு. சிறு குறிஞ்சா கன்று ஒன்றை வீட்டில் நடுங்கள் தொடர்புகளுக்கு T.P.: 021 222 5802.(சி/42633)

எம்மிடம் லவ்பேட்ஸ், கலர்மீன்கள், கண்ணாடி மீன்தொட்டிகள், தொட்டிகளுக்குரிய மோட்டர்கள், அழகு சாதனங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ஹரி, மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு. (சி/42635)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் விளையாட்டு மைதானத்திற்கு அருகில், காளி கோயில் வீதியில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9059840, 021 222 2168. (44849)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44756)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 09.05.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை கிளையிலும் நெல்லியடிக் கிளையிலும் சுட்டி பாம் வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர். (44755)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,மே4

பண்டத்தரிப்புப் பட்டினப் பகுதிக்குட்பட்ட 5 இடங்களில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

இன்றும், நாளையும் எதிர்வரும் 7ஆம் திகதியும் சில்லாலை, சாந்தை, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, பிரான்பற்று ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் அதனைக் கட்டி வைக்குமாறும், வளர்ப்பு நாய் குடும்ப அட்டையின்றி உள்ள நாய்களும் அழிக்கப்படுமென்றும் வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் திட்டமிடற் பிரிவு கேட்டுள்ளது. (185-202)

# 'பாண்ட்' வாத்தியப் போட்டி

யாழ்ப்பாணம்,மே4

தமிழீழ மாணவர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை மட்ட மாணவர்களுக்கிடையிலான 'பாண்ட்' வாத்தியப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் கோட்ட ரீதியில் இடம்பெறும் என்று தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.கிருஷ்ணா தெரிவித்தார் (8-203)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திரீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

**வாடிக்கையாளர்களே...**

பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

**மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்**

| | |
|---|---|
| ஸ்டான்லி வீதி, (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம். 0714168475 | யாழ். வீதி, மானிப்பாய். T.P: 021-222 2884 |

E.mail: moorthylazer@yahoo.com

# தேவை

Room to Read

அரசசார்பற்ற றூம் ரூ றீட் (Room to Read) (R+R) சார்பில் வடமராட்சியில் முன்பள்ளி கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்ய மேற்பார்வையாளர் ஒருவர் தேவை.

1. கேள்விகள் கோருதலும் 3 ஒப்பந்தங்களை மேற்பார்வை செய்தலும்
2. ஒரு வருட ஒப்பந்தம், புதுப்பித்தல் சாத்தியம்

**தேவைகள்:**

1. மேற்பார்வை செய்வதிலும் ஒப்பந்தங்களைக் கையாள்வதிலும் 5 வருட அனுபவம்.

தயவுசெய்து தொடர்புகொள்ளும் தொலைபேசி எண்ணுடன் சொந்த விவரங்கள், எதிர்பார்க்கும் சம்பளம் என்பனவற்றைக் குறிப்பிட்டு 09.05.2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:
www room to read.org.

விளம்பர இல.2576,
மே/பா, உதயன்,
யாழ்ப்பாணம் (44796) (51-21-16-18)

## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ வீசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (44881) (26-16-18)

தொடர்பு: நடேசன், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 - 05 - 1933 | 04 - 04 - 2005 |

அமரர்

## கதிரன் கந்தையா

(முன்னாள் ஊழியர், சிமெந்து கூட்டுத்தாபனம்)

31ஆம் நாள் இந்த முற்றத்தில் – உன்
சுற்றத்தார் சேர்ந்திருக்கிறார் – நீ
பெற்றவர் பெருமூச்சு விட்டழுகிறார்
நீர் செத்தது சுத்தப்பொய் – என்று
சத்தம் போடுகிறார்
சற்றும் மறக்க முடியவில்லையே.

இல.145,
செம்மணி றோட்,
நாயன்மார்க்கட்டு.

குடும்பத்தினர்.

(சி-42626) (21-16-18)

# பணிநிலை வேண்டுகை

## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்

பதிவு இல. L 85305

**1. பணிநிலை : உளவளத்துணையாளர்**

- அனுபவம் : உளவளத்துணைச் சேவையில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.
- தகைமை : உளவளப்பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- கல்வித்தகைமை: க.பொ.த.(சா.த) பரீட்சை சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் . கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**2. பணிநிலை : நிர்வாக அலுவலர்**

- அனுபவம் : நிர்வாக அலுவலராக ஏனைய நிறுவனங்களில் பணியாற்றி ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கல்வித்தகைமை: க.பொ.த. (உயர்தரம்) கற்றவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் : நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**3. பணிநிலை : மொழிபெயர்ப்பாளர்**

- அனுபவம் இரண்டு வருடங்கள் இத்துறையில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன், தமிழ், ஆங்கிலம், சிங்களம் எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
- கல்வித்தகைமை : க.பொ.த(உ.த.)பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களை 15.05.2005 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
தலைமைப் பணிமனை,
நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-42626) (21-16-18)

# மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும் அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல...

இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம்: 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்)
(வார இறுதி நாள்களும் விடுமுறை நாள்களும் உட்பட)

**சிறப்பு விலைக் கழிவு**

தொடர்புகளுக்கு:
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

(சி-42629) (16-29-18-21)

# மரண அறிவித்தல்

## கந்தையா குலசேகரம்

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த கந்தையா குலசேகரம் நேற்று (03.05.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஞானியார்) - பகவதியம்மா ஆகியோரின் அன்பு மகனும் அருந்ததியின் அன்புக் கணவரும் அமுதா, குமுதா, யசோதா, பிரபாகரன், காலஞ்சென்ற குபேரன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் குலராசன், காலஞ்சென்ற குலமணி ஆகியோரின் சகோதரரும் தமிழ்நிலவன், மகிழிசை ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (04.05.2005) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு.பிரபாகரன (மகன்)

முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (44945)(32-21-18-16)

**SAAMSTECH இன் மாலை நேர, சனி, ஞாயிறு ஆங்கில வகுப்பு**
**பாடசாலை மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்**

ஒவ்வொரு பிரிவிலும் 24 மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

1.கதைத்தலுக்கான அடித்தளம் 2.கதைத்தலுக்கான சூழல் 3.கதைத்தல் மூலமான பயிற்சி

மாதக்கட்டணம் ரூபா 1000/- மட்டும். புத்தகங்கள் மற்றும் எழுத்துக்கொப்பி இலவசம்

**SAAMSTECH, 841, HOSPITAL RD, JAFFNA. 021- 4591571**

# ஒட்டுசுட்டானில் மூன்று முக்கிய குளங்கள் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை

## விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்

ஒட்டுசுட்டான்,மே4

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையின்போது, கடுமையாகப் பாதிக்கப்பட்ட குடிதாங்கியாகுளம், விடத்தல்குளம், கட்டைகாட்டுகுளம் போன்றன இதுவரை புனரமைக்கபடாமையால் விவசாயிகள் பெரும் சிரமமடைந்து வருகின்றனர். இக்குளங்களின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சுமார் 253 ஏக்கர் விவசாய நிலம் செய்கை பண்ணப்பட்டு வருகிறது.

இக்குளங்கள் சேதமடைந்து இருப்பதால், மழை காலங்களில் போதிய நீரை தேக்கி வைக்க முடியாதுள்ளது. இதனால், காலபோகச் செய்கைகள் பாதிப்புகுள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து பல்வேறு தரப்பினிடமும் முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிககையும் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப்பிரதேசத்திலுள்ள காக்கைப் பணிக்கன்குளம் ஆரம்பத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டது. தற்போது இரண்டாம் தடவையாகவும் அக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அவசியமான குளங்களை திருத்தியமைக்காது, மீண்டும் மீண்டும் ஒரு குளத்தைப் புனரமைத்து வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் மாற்றப்பட்டு ஏனைய குளங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் கேட்டுள்ளனர். (8-341-204)

## ஒட்டுசுட்டானில் பாம்புக்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரிப்பு

ஒட்டுசுட்டான்,மே4

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாம்பினால் கடியுண்டு வருவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மக்கள் நடமாடும் பகுதிகளுக்கு வரும் பாம்புகளால் பலர் கடியுண்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி பாம்பினால் கடியுண்ட கற்சிலைமடுவைச் சேர்ந்த சின்னத்துரை நவரத்தினம் (வயது 42) என்பவர் தற்போது புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

(8-341-204)



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஆற்றுப்படுத்தல் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்வு கடந்த மாதம் 16ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தில் நடைபெற்றது. அழகியல் கலா மன்றமும், அரங்க செயற்பாட்டுக்குழுவும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. ஆசிரியர்கள் பயிற்சியில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: வட்டக்கச்சி செய்தியாளர்)*

## பாதிக்கப்பட்டோருக்கான 2 ஆம் கட்டக் கொடுப்பனவு

புதுக்குடியிருப்பு,மே4

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 2 ஆம் கட்டக் கொடுப்பனவுகள் முல்லைத்தீவு மக்கள் வங்கியின் நடமாடும் சேவை மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

செம்மலை கிழக்கு, செம்மலை, அளம்பில், முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, வட்டுவாகல், மாத்தளன், அம்பலவன், பொக்கணை, வலைஞர் மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு அண்மை நாள்களில் இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

(8-353-202)

## கடல் உணவு பதனிடல் தொடர்பான பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி,மே4

ஐ.எல.ஓ.நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகம் கடல் உணவு பதனிடலும் பொதி செய்தலும் தொடர்பான பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துள்ளது.

கௌதாரிமுனைக் கிராமத்தில் கடந்த 18 ஆம் திகதி மண்ணித்தலை கடற்றொழிலாளர் இளைப்பாறும் மண்டபத்தில் இந்தப் பயிற்சியின் ஆரம்ப வைபவம் இடம்பெற்றது.

இப்பயிற்சித் திட்டம் புலோப்பளை, மாசார், உருத்திரீஸ்வரபுரம், பரமன் கிராய் ஆகிய கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. (8-202)

# ஊடகவியலாளர் சிவராமின் கொலைக்காக வேதனைப்பட வேண்டியவர்கள் சிங்களவர்களே

## புலிகளின் பிரமுகர் பாலகுமாரன் உரை



கிளிநொச்சி,மே4

சிங்கள தேசத்தினுடைய பொய்மை, அதன் பொருட்டு பொய்யான முடிவுகளை எடுக்கக்கூடிய அந்தச் சூழ்நிலை, தராக்கியின் சாவின் காரணமாக மென்மேலும் அதிகரித்துவிட்டது. அதன் காரணமாக ஒரு போதும் தீர்வுக்கு வருவதற்கான சகல வாய்ப்புக்களையும் சிங்கள தேசம் இழந்துவிட்டது. எனவே, சிவராமின் கொலைக்காக தமிழர்களை விடவும் வேதனைப்பட வேண்டியவர்கள் சிங்களவர்களே.

- இவ்வாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற மாமனிதர் சிவராமின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாமனிதர் தர்மரத்தினம் சிவராமின் சாவோடு ஸ்ரீலங்கா அரசு இனிமேல் உலகத்தின் முன்னால் தலை நிமிர்ந்து கருத்தைச் சொல்வதற்கான அருகதையை ஒட்டுமொத்தமாக இழந்துவிட்டது.

'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அஜித் தமிழ்த்தேசிய போராட்டத்தினுடைய வடிவம், அதனுடைய அடிப்படை ஆதாரம் அதனுடைய உச்சத் தியாகம் எனத் தலைப்பிட்டு சிவராமின் படுகொலையை எழுதியுள்ளார். இங்கு நான் சொல்லும் கருத்துக்கள் எல்லாம் சிங்களவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்களாகும். இதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தின் வீச்சு எவ்வாறு உள்ளதென்பதையும் புரிந்துகொள்ளமுடியும்.

தர்க்கம், நீதி, நியாயம், மனிதநேயம், அறிவு, துணிவு என்பன சிவராமின் சாவோடு செத்துவிட்டன. அவரின் அற்புதமான அறிவு, வரலாறு, சமூகவியல், சர்வதேச பரிணாமம் தொடர்பான தரவுகள் எல்லாவற்றையும் விட, இராணுவ ரீதியான போரியல் ஆய்வு, மனிதநேயம் அனைத்தும் கொண்ட சர்வதேசத் தரம் வாய்ந்த ஊடகப் போராளியை உலகம் இழந்துவிட்டது.

அவரின் செயற்பாடு மறுக்கப்பட முடியாத நிலைக்குத் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட நியாயத்தை உலகின் முன் எடுத்தியம்பி நிற்கிறது.

எந்தவொரு முட்டாளாவது தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக, பலவீனப்படுத்துவதற்காக இந்தச் சாவை நிகழ்த்தியிருந்தால் அதைப்போல ஓர் அடி முட்டாள்த்தனமான, பைத்தியக்காரத்தனமான ஒரு செயல் எதுவும் இருக்கமுடியாது. இவரது சாவிற் கூடாக தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் பெறப் போகின்ற அந்தப் பலம் என்பது மிகமகத்தானதென மிக மோசமான இனவாதக் கருத்திற்குள்ளே சிக்கி உணர்விழந்த தயான் எழுதியிருக்கிறார் என்றால் இந்த வீழ்ச்சியினுடைய அந்த வீரியத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (8)





# இரணைமடுக்குள நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் கூடிய நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை

பரந்தன்,மே4

இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் இவ்வாண்டு சிறுபோகச் செய்கை மேற்கொள்வதற்கான நிலப்பரப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்த 8 ஆயிரம் ஏக்கர் நில அளவிலும் கூடுதலாக 3 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளலாம் எனக் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக்குளத்தின் கீழ் 2005ஆம் ஆண்டுக்கான சிறுபோகம் மேற்கொள்வதற்கு 8 ஆயிரம் ஏக்கர் நிலமே அனுமதிக்கப்பட்டிருந்தது.

அந்தத் தீர்மானத்தின்படி விவசாயிகள் நெறசெய்கைக்கான ஆரம்ப நிலப்பண்படுத்தலுக்குக குளத்தில் இருந்து தண்ணீரைப் பெற்றுக்கொளளாமையாலும் - வழமைக்கு மாறாக இம்முறை அதிக மழை பெய்துள்ளதாலும் மேற்படி குளத்தின் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக மேலும் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சிறுபோகம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்று அவர் மேலும் தெரிவித்தார். (8-352-203)

# கண்டாவளை வெலிக்கண்டல் வெளியில் சிறுபோக நெற்செய்கைக்கு அனுமதி

பரந்தன்,மே4

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வெலிகண்டல் வெளியில் 2005 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கனகராயன் ஆற்றின் மூலம் வழமையாக 200-300 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது வழமையாக இருந்து வந்தது.

இம்முறை கழிவு தண்ணீரில் நெற்செய்கை மேற்கொள்வதை விவசாயிகள் நிறுத்தியிருந்தனர்.

ஆனால், கடந்த மாதம் ஏற்பட்ட தொடர் மழை காரணமாகக் கனகராயன் ஆற்றின் மூலம் நீர கடலுக்குள் கலக்கத் தொடங்கியது.

கனகராயன் ஆற்றுநீர் கடலுக்குள் சென்று வருவதால் ஆற்றுநீரின் தன்மை மாறிவிடும் எனவே, அதனைத் திசை திருப்பி விவசாயம் செய்யலாம் என்ற வெலிகண்டல் விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து மேற்படி நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கான ஆலோசனைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் வழங்கியதோடு எதிர்வரும் ஜுலை மாதம் இரணைமடுக்குளப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. எனவே, விரைவாக நெற்செய்கையை மேற்கொண்டு குளப் புனரமைப்புக்கு உதவுமாறும் கேட்டுள்ளது.(8-352-203)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவில் பாதீனியம்

பரந்தன்,மே4

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவில் பாதீனியச் செடி பரவியுள்ளதாக கிளிநொச்சி விவசாயத்திணைக்களப் பாடவிதான உத்தியோகத்தர் இ.சௌந்தரராசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பாதீனியச்செடி ஓர் இந்திய ஆக்கிரமிப்புச் செடியாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களிலும் இத்தாவரம் காணப்படுகின்றது.

இதனால், மனிதர்களுக்கு ஒவ்வாமை மற்றும் தொற்றுநோய் போன்றன ஏற்பட வாய்ப்புண்டு.

இச்செடி காணப்படும் இடங்களில் ஏனைய பயிாகளும் செழிப்பாக வளர்ச்சியடையாது. அத்துடன், உற்பத்திப் பயிர் பாதிப்படையும் நிலையும் ஏற்படும்.

இச்செடியின் வளர்ச்சிக் காலத்தில் ஒரு செடியில் 15 ஆயிரம் விதைகள் உருவாகும். அது பின்னர் பரவிக்கொண்டே செல்லும். எனவே, இதனை உடன் அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.

(8-352-203)

# ஐந்து வீதிகளைப் புனரமைக்க கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை

கரைச்சிப் பிரதேச சபையினர், கிளிநொச்சி புகையிரத நிலைய வீதி, திருநகர் வீதி, விவேகானந்தநகர் வீதி, திருவையாறு வீதி, கிளிநொச்சி மகாவித்தியாலய வீதி ஆகிய ஐந்து வீதிகளையும் புனரமைப்புச் செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

மேற்படி வீதிகளின் புனரமைப்பு வேலைகள உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும்- பிரதேசசபை தனது வருமான நிதியில் இருந்தே இந்தப் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

வீதிப்புனரமைப்புக்கான தொழில்நுட்ப வேலைகள தற்போது நடைபெற்றுவருகின்றன என்று கரைச்சிப் பிரதேசசபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் தெரிவித்தார்.

(எ-405-203)

உ

ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

## யாழ்ப்பாணம் – வண்ணை
## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
## ஏகாதசி உற்சவம்

நிகழும் பார்த்திப ஆண்டு சித்திரைத் திங்கள் 21 ஆம் நாள் (04.05.2005) புதன்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலயத்தில் ஏகாதசி உற்சவம் நடை பெறும். அடியார்கள் அனைவரும் இந்த உற்சவத்தில் பங்குகொண்டு ஸ்ரீமந் நாராயணனின் அருள் பெற்று ஸ்ரீ மகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

– ஆதீனமகாசபை.

பெருமாள் கோயில், யாழ்ப்பாணம். (சி-42620) (39-16-15-26)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 – 03 – 1965

உதிர்வு 15 – 04 – 2004

### அமரர் நாகமணி இந்திரகுமார்

ஓராண்டு சென்றாலும் இங்கே
கலையவில்லை உங்கள் நினைவுகள்!
காலங்கள் பல சென்றாலும்
அடங்கவில்லை உங்கள் பிரிவுத்துயர்!
அன்பு உருவமே எங்கள் மூச்சுள்ளவரை
உங்கள் நினைவின்றி வேறில்லை.

இல.10, ஈச்சமோட்டை,
கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். (44910) (39-16-15-26)

உங்கள் பிரிவால் துயுறும்:
மனைவி, பிள்ளைகள்.

## மீசாலையில் விபத்து குடும்பஸ்தர் காயம்!

சாவகச்சேரி,மே4

மீசாலை புதிய ரயில் நிலையப் பகுதியில் இடம்பெற்ற ஹண்டர் - மோட்டார் சைக்கிள் விபத தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியள வில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரான மீசாலைப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி மூங்கிலாறுப் பகுதியை வசிப்பிட மாகக் கொண்டவருமான குமாரசாமி கிருஷ்ணா னந்தன் (வயது - 58) என்ற குடும்பஸ்தரே படு காயமடைந்தவராவார்.

இவர் உடனடியாகச் சாவகச்சேரி மருத்து வமனைக்குக் எடுத்துச்செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டார்.

விபத்துக்குள்ளான ஹணடர் வாகனம் வீதி யின் அருகில் உள்ள வீடொன்றின் மதிலை உடைத்துக்கொண்டு வீட்டின் கிணற்றின் அருகே நின்றது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(3-12-31)

## வெலிக்கந்தையில் இருவர் சுடப்பட்டனர்

வெலிக்கந்தை, குடாபொக்கனையில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கருணா குழுவைச் சேர்ந்த தவலோகராஜா (வயது25), அவரது தந்தை முத்தையா ஆறுமுகம் (வயது55) ஆகியோர் காயமடைந்தனர். இருவரும் பொலன் னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இவர்கள் தமது சேனையில் பயிர்ச் செய் கையில் ஈடுபட்டிருந்த சமயமே சூட்டுக்கு இலக்காகினர்.

வெலிக்கந்தைப் பொலீஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-3)

## மதில் வீழ்ந்து சிறுமி காயம்!

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் வெடிப்பேற்பட்டிருந்த பழைய மதில் சுவரைப் பிடித்தபோது அது சரிந்து விழுந்ததில் அதன் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார்.

கொடிகாமம் பகுதியில் கடந்த இருநாள்களுக்குமுன் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்தவரான கோபால் கவிதா (வயது 16) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (3-15)

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வ–து]
## கிளைப் பொதுச்சபைக் கூட்டம்
## (07-05-2005)

09-04-2005ஆம் திகதி நிறைவெண் இன்மையால் நடைபெறாதிருந்த பின்வரும் கிளைகளுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 07-05-2005 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெறவுள்ளது.

*புலோலி கிழக்கு கிளை இல. 02 – மொடோன் கல்வி நிலையம்*
*சவனாய்க் கிளை இல. 05 – ஞானசம்பந்தர் கலா மன்றம்*
*வல்வைக கிளை இல.13 – வல்வை அ.மி. தமிழ்கலவன் பாடசாலை*
*நெல்லண்டைக்கிளை இல.23 – நெல்லண்டை பாலர் பாடசாலை*
*தொண்டைமானாறு கிளை இல.14 – யா/வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாசாலை தொண்டைமானாறு*

(சி-42630)(26-16-15) - செயலாளர்.


## பிரச்சினை தீர புதியதொரு வழி

தீராத நோய்களா? பரம்பரை வியாதியா?
எந்த நோயாக இருந்தாலும் எளிய யோகாசன
முறைகளுக்கு நிரந்தரமானதல்ல!
யோகாசனம் உங்கள் வாழ்வின் ஓர் அங்கம்!
மிக விரைவில் அளவெட்டியில் ஆரம்பிக்கப்படவிருக்கும்
யோகாசன வகுப்புக்களுக்கு உங்கள் பதிவுகளை (பெயர்,
விலாசம் என்பன) குறிப்பிட்டு நேரிலோ அல்லது
தபால் மூலமோ மேற்கொள்ளவும்.

(44916) (39-16-15-26)

மூாந்தினி திரைக்கலையகம்,
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.



## SAAMSTECH இன் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

SAAMSTECH இன் கல்வி தொடர்பான செயற்பாடுகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களைத் தயார்செய்வதற்கான பயிற்சியும் பணிநியமனமும். அனுமதி மற்றும் விவரங்களுக்கு க.பொ.த. உயர்தரத்தில் சித்தியுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் நேரில்வரவும். (44892)

**SAAMSTECH, TEACHERS TRAINING COLLEGE, 841, HOSPITAL RD., JAFFNA. 021- 4591571.**


# வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்
# பணிநிலை வேண்டுகை

**1. உள்ளகக் கணக்காய்வாளர் தரம் II (ஆண்/பெண்)**

**கல்வித்தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில்/உயர்கல்வி நிறுவனத்தில் B.Com/ H.N.D.A பட்டம் பெற்றவராகவும் ஒரு வருடத்திற்குக் குறையாத கணக்காய்வாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த.(உ/த) வர்த்தகப்பிரிவில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 05 வருடத்திற்குக் குறை யாத கணக்குப் பதிவாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:** 22–45 வருடங்கள்

**சம்பளம்:** 7710–10910 +2700
10X195+5X250

**2. கணக்காளர் தரம் II (ஆண்/பெண்)**

**கல்வித்தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் / உயர்கல்வி நிறுவனத்தில் B.Com/ H.N.D.A பட்டம் பெற்றவராகவும் ஒரு வருடத்திற்குக் குறையாத கணக்காளர் அனுபவம் பெற் றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த.(உ/த) வர்த்தகப்பிரிவில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 05 வருடத்திற்குக் குறையாத கணக்குப் பதிவாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:** 22–45 வருடங்கள்

**சம்பளம்:** 7710–10910 + 2700
10X195+5X250

**3. ஆளணி மேலாளர் தரம் II (ஆண்/பெண்)**

**கல்வித்தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் B.B.A/B.Com பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 05 வருடத்திற்குக் குறையாத ஆளணி மேலாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:** 22–45 வருடங்கள்

**சம்பளம்:** 7710–10910 + 2700
10X195+5X250

**4. தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு I தரம் I (ஆண்)**

**கல்வித்தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் NDT (Civil Engineering) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு 10 வருடத்துக்குக் குறையாத கட்டுமான மேலா ளர் அனுபவமும் கணிய அளவையில் திருப்தியான அனுபவமும் இருத்தல் வேண்டும்.

அல்லது

இதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:** 30–55 வருடங்கள்

**சம்பளம்:** 9160–11360 + 2700
10X220

**5. தொழில்நுட்ப உத்தியோகத்தர் வகுப்பு I தரம் III (ஆண்)**

**கல்வித்தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரியில் NDT (Civil Engineering) சான்றி தழ் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு 02 வருடத்துக்குக் குறையாத கட்டுமான மேலாளர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

**அகவை:** 21–45 வருடங்கள்

**சம்பளம்:** 6860–8560 +2700
10X170

**6. வேலை மேற்பார்வையாளர் தரம் III (ஆண்/பெண்)**

**கல்வித் தகைமை:** க.பொ.த.(சா/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

**அகவை:** 18–45 வருடங்கள்

**சம்பளம்:** 3800–5800 +2700
100X20

**7. களஞ்சியக் காப்பாளர் தரம் III (ஆண்)**

**கல்வித் தகைமை:** க.பொ.த.(சா/த) கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

**அகவை:** 18–45 வருடங்கள்

**சம்பளம்:** 3800–5800 + 2700
100X20

**8. கணக்குப் பதிவாளர்: (ஆண்/பெண்)**

**கல்வித் தகைமை:** க.பொ.த. (உ/த) வர்த்தகப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு, முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**அகவை:** 20–30 வருடங்கள்

**சம்பளம்:** 4000 – 6200 +2700
10X100 + 10X20

**9. காவல் கடமையாளர்:**

தகைமை: நற்பண்பும் நற்பழக்கவழக்கமும் தேக ஆரோக்கியமும் உள்ளவராகவும் எல்லாக் காலங்களிலும் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**அகவை:** 35 – 60 வருடங்கள்

**சம்பளம்:** 6000.00 (மொத்தச் சம்பளம்)

*குறிப்பு:*

- வேலைத் தளங்களில் தொடர்ந்து பணிபுரியும் பணியாளர்களுக்கு மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் முதல் மூன்றுமாத காலம் தகுதிகாண் நிலையில் கணிக்கப்படுவர். இக்காலத்தில் பயிலுநர் சம்பளம் மட்டுமே வழங்கப்படும்.

**வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம் ( NECTEC)**
**கண்டி வீதி, ஆனந்தபுரம்,**
**கிளிநொச்சி [மத்திய கல்லூரிக்கு அருகில்].**

- விண்ணப்பதாரர் பூரணப்படுத்திய விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களின் பிரதிகளுடனும் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வரவும்
- நேரில் வர முடியாதவர்கள் 09-05-2005 இற்கு முன் எமது பணிமனைக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**நேர்முகத்தேர்வு:**

01. பணிநிலை 01 முதல் 04 வரைக்குமான விண்ணப்பதாரர்களுக்கு 06-05-2005 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் எமது பணிமனையில் நேர்முகத்தேர்வு நடைபெறும்.
02. பணிநிலை 05முதல் 07 வரைக்குமான விண்ணப்பதாரர்களுக்கு 07-05-2005 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் எமது பணிமனையில் நேர்முகத்தேர்வு நடைபெறும்.
03. பணிநிலை 08முதல் 09வரைக்குமான விண்ணப்பதாரர்களுக்கு 16-05-2005 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் எமது பணிமனையில் நேர்முகத்தேர்வு நடைபெறும்.

(சி/42624)(42-16-26)

**பணிப்பாளர், NECTEC, கிளிநொச்சி.**

# விமல் வீரவன்ஸவுக்குக் கொலை அச்சுறுத்தலாம்!

## சிவராமின் கொலைக்குப் பின்னர் ஏற்பட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவுக்கும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளது என்று பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சிவராம் கடந்த வாரம் கடத்திப் படுகொலை செய்யப்பட்ட பின்னரே தமக்கு இந்தக் கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று விமல் வீரவன்ஸ பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிடம் முறையிட்டுள்ளார்.

இதுகுறித்து விமல் வீரவன்ஸ பொலீஸ்மா அதிபரிடம் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 28ஆம் திகதி ஊடகவியலாளர் சிவராம் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தக் கடத்தலுக்கும் கொலைக்கும் எமது கட்சிக்கோ எனக்கோ எந்தவிதத்திலும் தொடர்புகள் இல்லை.

பொலீஸார் சிவராமின் கொலை பற்றித் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இப்படியான ஒரு நிலையில், 29ஆம் திகதி காலை தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியில் பந்துல்ல பத்மகுமார என்பவர் சிவராமின் கொலையில் எனக்கும், எனது கட்சியினருக்கும் தொடர்பு இருக்கின்றது என்ற தொனியில் கருத்து வெளியிட்டார்.

அதேசமயம், மற்றொரு தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் காலை நிகழ்ச்சியிலும் அரசசார்பற்ற அமைப்பொன்றின் பிரமுகர், பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரியவிடம் கேட்ட கேள்வியொன்றின்மூலம் என்னையும் எனது கட்சியையும் சம்பந்தப்படுத்தினார்.

மறுபுறம் புலிகளுக்குச் சார்பாக அறிக்கை விடும் ஐ.தே.கவின் ராஜித சேனாரத்ன எம்.பி. மற்றும் ஜயலத் ஜயவர்த்தன போன்றவர்களும் எம்மீது குற்றஞ்சாட்டியுள்ளனர். இப்படியான சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் காரணமாகப் புலிகளாலும் ஏனைய ஆயுதக் குழுவினராலும் எமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இதுதொடர்பான எனது உத்தியோகபூர்வமான முறைப்பாட்டை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். கொலைசெய்யப்பட்ட சிவராம் என்ற ஊடகவியலாளர் புலிகளின் 'தமிழ் நெற்' என்ற இணையத்தளத்தின் ஸ்தாபகர். அவர் புலிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்திருக்கும் இந்த நிலையில், எம்மீது குற்றஞ்சுமத்துவது வருந்தத்தக்கது - என்று அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

# முகாமை உதவியாளர் சேவை மாகாண சபையிலும் அமுல்

## திணைக்களங்களுக்குச் சுற்றறிக்கை

தென்மராட்சி,மே 4

வடக்கு - கிழக்கு மாகாண முகாமை உதவியாளர்கள் சேவை 2004.01.01 தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதாக மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கை மூலம் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளது.

மாகாணப் பொது எழுதுநர் சேவை, மாகாணத் தட்டெழுத்தாளர் சேவை, மாகாணச் சுருக்கெழுத்தாளர் சேவை, மாகாணக் கணக்குப் பதியுநர் சேவை, மாகாணச் சிறாப்பர் சேவை, மகாணப் பண்டகசாலை காப்பாளர் சேவை ஆகிய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மாகாண முகாமை உதவியாளர்கள் சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

2003.12.31 ஆம் திகதிக்கு முன்னர் வகுப்பு II 'ஆ' பதவியில் உள்ள அலுவலர்கள் முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கும் -

வகுப்பு II 'அ' பதவியில் உள்ள அலுவலர்களும் சுருக்கெழுத்தாளர் சேவையின் வகுப்பு II பதவியில் உள்ள அலுவலர்களும் வகுப்பு II இற்கும் -

வகுப்பு I இல் உள்ள அலுவலர்கள் வகுப்பு I இற்கும் -

அதிசிறப்பு வகுப்பில் உள்ள அலுவலர்கள் அதிசிறப்பு வகுப்புக்கும் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

2005.03.24 ஆம் திகதி மேற்குறித்த சேவையில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற அல்லது சேவை பூர்த்தியாகின்ற நிரந்தரப் பதவிகளையுடைய நியமனம் பெறுநர்கள் விருப்பக் கூற்றுப் பத்திரமொன்றைப் பூர்த்திசெய்து நிறுவனத் தலைவர் ஊடாக மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

விருப்புத் தெரிவிக்காத அலுவலர்கள் ஓய்வு பெற வைக்கப்படுவர் எனவும் - ஓய்வுபெற வைக்கின்ற அலுவலர்கள் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 02ஆம், 07 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவர் ஆவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்றுள்ள அலுவலர்களின் விருப்புக்கூற்றுப் பத்திரங்களை அந்நாட்டு இலங்கைத் தூதுவர் அலுவலகங்களின் தலைவர் முன்னிலையில் கையொப்பமிட்டுச் சான்றுப்படுத்தியும் -

தூதுவர் சேவைகள் இல்லாத நாடுகளின் அலுவலர்களது கூற்றுப்பத்திரங்களைத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சுச் செயலாளர்கள் ஊடாகவும் அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அதிசிறப்பு வகுபில் உள்ள அலுவலர்களின் இடமாற்றங்கள் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் திட்டங்களுக்கமைய மாகாணப் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரினால் செய்யப்படுவதுடன், மற்றைய கட்டுப்பாடுகள் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் செயறப்படுத்தப்படும்.

வகுப்பு I, II, III ஐச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பாகச் சகல அலுவல்களும் மாகாணப் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரினால் நிர்வகிக்கப்படுமென அமைச்சின் செயலாளர் அ.சி.பத்மநாதன் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

சேவையில் உள்ளீர்ப்பதற்காக 2005.07.23 இற்கு முன்னர் அலுவலர்கள் விருப்புத் தெரிவிக்க வேண்டும் என்றும் -

மேற்படி திகதிக்கு முன்னர் விருப்புத் தெரிவிக்காத அலுவலர்களின் விவரங்களை ஜூலை 31ஆம் திகதிக்கு (31.07.2005) முன் அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (எ-117)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் சகல பெற்றோரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர், அதிபர் திருமதி ச.ஜெயராசா கேட்டுள்ளார். (8-202)

## பாதுகாப்புக் கருதியே ஜனாதிபதி மேதினக் கூட்டத்தைத் தவிர்த்தார்

கொழும்பு,மே 4

பொது இடங்களில் நடமாடுவதைக் கூடிய வரை தவிர்த்துக்கொள்ளுமாறு பாதுகாப்புத் துறையினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனாலேயே, ஞாயிற்றுக்கிழமை காலிமுகத்திடத்தில் நடந்த சுந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகப் பாதுகாப்புத்துறையினரால் அவருக்கு வழங்கப்பட்ட அறிக்கையொன்றிலும குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.(எ-க)

# இலங்கையில் வெளிச் சக்திகள்; புதுடில்லியின் கவனம் அதிகரிப்பு!

கொழும்பு, மே 4

தெற்காசியாவின் கேந்திர நிலையமாகக் கருதப்படும் இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகக் கருதும் புதுடில்லி, இது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்திவருவதாக அறியமுடிகின்றது.

இதுவிடயத்தில் இலங்கையின் நிலைப்பாட்டை அறியவும், சில முக்கியமான அறிவுரைகளை வழங்குவதற்குமாகவே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் ஷியாம் சரண் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இந்திய இல்லத்தில் ஞாயிறன்று நடைபெற்ற இரவு விருந்துபசாரத்தின்போது செயலாளர் ஷியாம் சரண், புதுடில்லியின் இந்த அபிப்பிராயத்தைக் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளிடம் விவரித்தார் எனத் தெரியவருகிறது.

அம்பாந்தோட்டையில் துறைமுகமொன்றை அமைப்பதற்கும், இலங்கையில் ரயில்வே மற்றும் அனல்மின் நிலையங்களை அமைப்பதற்கும் சீன அரசு காட்டிவரும் ஆர்வத்தையும், இலங்கையுடன் பாதுகாப்புத் தொடர்புகளை ஏற்படுத்த பாகிஸ்தான் காட்டிவரும் முனைப்பையும் புதுடில்லி அவதானித்துவருவதாக இந்திய வெளியுறவுச் செயலர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளர்.

இந்த விவகாரங்கள் குறித்து இலங்கை அரசியல் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடும் அதேசமயம், இலங்கை விடயத்தில் இந்தியா கொண்டிருக்கும் நிலைப்பாட்டையும் தாம் மீண்டும் வலியுறுத்தவுள்ளார் எனவும் இந்திய வெளியுறவுச் செயலர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-க)

# தென்மராட்சி வலய தமிழ்த்தினப் போட்டிகள்

தென்மராட்சி,மே 4

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட, பிரதேச மட்டத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

வலயமட்டப் போட்டிகளில் எதிர்வரும் 7 திகதி எழுத்தாக்கப் போட்டிகள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் -

நடன நிகழ்வுகள் எதிர்வரும் 8திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

பிரதேச மட்டப் போட்டிகளில் கொடிகாமம் பிரதேச பாடசாலைகளுக்கான தனிநிலைப் போட்டிகள் 10 திகதி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும் -

குழுநிலைப் போட்டிகள் 11ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நாட்டுக் கூத்துப் போட்டிகள் 12ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

சாவகச்சேரிப் பிரதேச பாடசாலைகளுக்கான தனிநிலைப் போட்டிகள் 13ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் குழுநிலைப் போட்டிகள் 14 ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் நாட்டுக் கூத்துப் போட்டிகள் 15 ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

போட்டிகள் யாவும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களை உரிய பொறுப்பாசிரியர் இருவருடன் அனுப்பிவைக்குமாறு அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார்.

பிரதேச மட்டப் போட்டிகளில் சாவகச்சேரி பிரதேசத்தில் 29 பாடசாலைகளும், கொடிகாமம் பிரதேசத்தில் 26 பாடசாலைகளும் பங்குபற்றவுள்ளன. (3-117)

## ஆனந்தாக் கல்லூரி ஒரு வாரத்துக்கு மூடப்பட்டது

கொழும்பு,மே 4

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் மேல் வகுப்புகளை ஒரு வாரத்திற்குக் கல்வி அமைச்சு மூடியுள்ளது.

நேற்றுமுன்தினம் விடுமுறையின் பின்னர் கல்லூரி ஆரம்பமானது. மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரிக்கு வருகை தந்திருந்தனர். பதில் அதிபரின்கீழ் கல்விச் செயற்பாடுகள் தொடங்கின. எனினும், வளாகத்தினுள் பிரச்சினை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்தே கல்லூரியைத் தற்காலிகமாக மூடும் முடிவைக் கல்வி அமைச்சு எடுத்தது.

தரம் ஒன்று வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதில் இந்தக் கல்லூரி அதிபர் முறைகேடாக நடந்து கொண்டார் எனத் தெரிவித்து அதிபர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருந்தார். அதனை எதிர்த்து மாணவர்களும் பெற்றோரும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வந்தனர்.

நேற்றுமுன்தினம் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்துப் பாடசாலை மூடப்பட்டது. ஆயினும், ஆசிரியர்களும் ஊழியர்களும் வழமைபோல் கல்லூரிக்குச் சமுகமளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகள் இன்று புதன்கிழமை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-3)





யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் யாழ். றோட்டறிக் கழகத்துடன் இணைந்து சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட உடுத்துறைப் பகுதி மாணவர்களின் இரவு நேரக் கற்றல் செயற்பாடுகளுக்காக மின்பிறப்பாக்கி ஒன்றையும், மின் உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கியது.

அந்த நிகழ்வில் அப்பகுதிக்கிராம அலுவலர் தவராசா உரையாற்றுவதையும் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் பூவேந்தன், டாக்டர் சிவதாஸ், தொழில்சார் பொறுப்பாளர் றோட்டேரியன் என்.சரவணபவன், றோட்டேரியன் ரவிகரன், றோட்டேரியன் சுரேந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் - மின்பிறப்பாக்கி மாணவர் அமைப்பினரிடம் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (3-203)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதி அழைப்பும்



தோற்றம்
27-06-1941

மறைவு
16-04-2004

## திருமதி
## துரைராசா இராஜேஸ்வரி (துவக்கிளி)

ஸ்டான்லி றோட், துரைராசா கட்டட உரிமையாளர்
(கொத்தியால் ஒழுங்கை, வேம்படி, வல்வெட்டித்துறை)

பத்துத் திங்கள் பாரில்
பத்தியம் காத்துப் பெற்ற
பத்தரை மாற்றுப் பசும் பொன்னே எம் தாயே!
அன்றெமை ஆழ்துயரிலாழ்த்தி
அன்புத் தந்தை பிரிந்த பின்னே
அன்னையாய் தந்தையுமாய்
அனைவருக்கும் ஊன்று கோலாய்
நின்றெமை வளர்த்த எம் அன்னையே!
இப்பிறப்பில் உமைப் பிரிந்தோம்
எப்பிறப்பில் காண்போமினி?
வருடம் ஒன்று போனபோதும்
மாறுமோ உங்கள் அன்புமுகம்?
தாளாத வேதனையில் தவிக்கவிட்டு விட்டு
மீளாத்துயில் போனீர்களே.......!

நாளை (05.05.2005) வியாழக்கிழமை வரும் எமது அன்புத் தாயாரின் ஆண்டுத் திதியை முன்னிட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் எமது இல்லத்தில் அன்றையதினம் நடைபெறுகின்ற ஆத்மசாந்திக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கொத்தியால் ஒழுங்கை,
வேம்படி, வல்வெட்டித்துறை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/42628)(42-11-15)





மறைந்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றன.

முன்னதாக மட்டக்களப்பில் புலிகளின் கரடியனாறு 'தேனகம்' விடுதியில் அவரது உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அஞ்சலி செலுத்துவதையும், தேசியத் தலைவரால் வழங்கப்பட்ட 'மாமனிதர்' கௌரவத்தினை மட்டு.அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு வாசிப்பதையும், சிவராமின் பூதவுடலை ஊடக வியலாளர்கள் தாங்கிச் செல்வதையும் படங்களில் காணலாம்.

## கருத்தரங்குகள்

சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் ஏற்பாட்டில் கோடைகால இறையியல் பயிற்சிப் பட்டறையின் சிறப்புக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 'சமயங்கள் ஒரு மறுபார்வை' என்னும் தலைப்பில் பெண்கள் கல்வி ஆய்வு நிலையப் பணிப்பாளர் கலாநிதி செல்வி திருச்சந்திரன், தமிழ்நாடு இறையியல் கல்லூரி விரிவுரையாளர் அருள்திரு.கலாநிதி எம்.ஞானவரம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்குவர். (8-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் சமூக விஞ்ஞானப் பகுதி ம நடத்தும் கருத்தரங்கு 1 இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'இலங்கையில் சுனாமிக்குப் பின்னதான புனர்வாழ்வு புனருத்தாரண அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள்' என்னும் பொருளில் புவியியற்றுறை சிரேஷ்ட புவியியல் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்துரை நிகழ்த்துவார். (8-204)

# மாவிலைத் தத்தித் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

வலி.தெற்கு,மே4

வலி.மேற்குப் பிரதேசத்தில் மாமரங்களுக்கு ஏறபடும் மாவிலைத் தததித் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தொல்புரம் கமநலசேவை நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக விவசாயப் போதனாசிரியர் வி.செல்வநாயகம் மாவிலைத் தத்தித் தாக்கத்தை மருந்து விசிறி கட்டுப்படுத்த முடியும் என்றும் மருந்து தெளிக்கக்கூடிய தெளிகருவி தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் இருப்பதாகவும் தேவையானவர்கள் கமக்காரர் அமைப்புகள் மூலம் அல்லது நேரடியாக தன்னுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (8-175)

## வலிகாமம் மேற்கு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வலி.மேற்கு,மே4

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கும் விவசாயக் குழுக்கூட்டம் நண்பகல் 12 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (ஜ-175)

### ஆழிப்பேரலையால் சேதமடைந்த

# கிணறுகளை நிர்மாணிக்கவும் திருத்தியமைக்கவும் நிதியுதவி

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 43 குடும்பங்கள் தமது வீட்டுக் கிணறுகளைத் திருத்தியமைப்பதற்கென தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் நிதியுதவியையும் உதவிப் பொருள்களையும் வழங்கியுள்ளது.

பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகர் பகுதியில் உள்ள பழைய குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான நிகழ்வு ஒன்று கடந்த சனிக்கிழமை அனர்த்த புனர்வாழ்வுச் செயலகப் பணிப்பாளர் க.பாலையா தலைமையில் நடைபெற்றது.

சுவிஸ் நாட்டில் வாழும் வறுத்தலைவிளானைச் சேர்ந்த வி.மார்க்கண்டு என்பவரும் அவருடன் இணைந்தவர்களும் இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவனேசனும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனச் செயலாளர் அ.விவேகானந் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

33 புதிய கிணறுகள் நிர்மாணிப்பதற்கும் 10 பழைய கிணறுகளைத் திருத்தியமைக்கவும் இந்த உதவிகள் பயன்படுத்தப்படவுள்ளன. (8-86)




பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக நிதி உதவிகளையும் பொருள்களையும் பயனாளிகள் பெறுவதைப் படத்தில் காணலாம். (படங்கள் : நேசன்)

# இணைந்த சேவை அலுவலர்களுக்கு இனிமேலாவது குழப்பமில்லாத இடமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்துக

## உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் அறிக்கை

**வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த சேவை அலுவலர்களது இடமாற்றத் திட்டம் தொடர்பாக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கை இது.**

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் 2004, 2005ஆம் ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் ஓர் இடமாற்றத் திட்டமில்லாத இடமாற்றமாகும்.

2004ஆம் ஆண்டுக்கான இடமாற்றசபைக்கு எமது சங்கத்திற்கு உரிய கால அவகாசத்துடன் அறிவிக்காது அறிவித்த அறிவித்தல், இடமாற்ற சபை கூடிய பின்னரே எமக்குக் கிடைக்கப்பெற்றது. இதனால், இடமாற்ற சபையில் கலந்துகொள்ளமுடியவில்லை.

வருடாந்த இடமாற்றமானது வருடத்தின் ஆரம்பத்தில் (ஜனவரி 01ஆம் திகதி முதல்) செயற்படுத்தப்படவேண்டியது. இந்த இடமாற்றம் 01.01.2004ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்டு அலுவலக நிர்வாக நடவடிக்கைகளைக் காரணம் காட்டி 01.04.2004 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டது. பின் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் காரணமாக காலவரையறையில்லாது பிற்போடப்பட்டது. பின் குறித்த இடமாற்றத்தை 01.06.2004 இலும் 01.07.2004 இலும் நடைமுறைப்படுத்துவதென அறிவிக்கப்பட்டு வட மாகாணத்தைப் பொறுத்தவரை 75 வீதம், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 25 வீதமுமே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏனைய மிகுதி இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால், இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து 2005இல் ஒழுங்கான முறையில் எமது சேவையினருக்கு பாதிப்பு இல்லாத வகையில் செய்யுமாறு கோரப்பட்டது. இதற்கு எதுவித பதிலும் தரப்படவில்லை. இந்த இடமாற்றத்தில் அரசியல் செல்வாக்கும், அதிகாரிகளின் செல்வாக்கும் அற்றவர்களே இடமாற்றத்தில் சென்றவர்கள். ஏனையவர்களது இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாது விட்டுள்ளார் மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் அவர்கள். 2004ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் ஒரு நிலையத்தில் அல்லாது பல உள்ளூராட்சி மன்றங்களில் சேவைக்காலத்தை ஒருங்கிணைத்து 5 வருடத்திற்கு மேற்பட்டவர்கள் எனின் அவர்கள் யாவரையும் இடமாற்றத்திற்குட்படுத்துவதென மேற்கொள்ளப்படும் பலரை இந்த இடமாற்றத்திற்குள்ளாக்கப்படவில்லை. இதற்குச் சரியான விவரம் இல்லாது செய்யப்பட்டதே. காரணமாகும். இவ்வாறு தவறவிட்டோர் பட்டியல் எம்மால் சமர்பிக்கமுடியும்.

2004ஆம் ஆண்டு இடமாற்றம் தொடர்பாக எம்மால் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு எழுதப்பட்ட பல கடிதங்கள் ஆளுநர் செயலகத்தால் பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சுக்கு நடவடிக்கைக்கு அனுப்பியும் எதுவித பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், 2005ஆம் ஆண்டு இடமாற்றத்தில் உள்ளூராட்சி ஆணையாளரைத் திணைக்களத்திற்கு இடையேயான இடமாற்றத்தைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தை பிரதம செயலாளரது ஒப்பந்தத்துடன் நடைமுறைப்படுத்த முயன்றும் இற்றைவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட இடமாற்ற சபைக்கு எமக்கு அறிவிக்கப்படவில்லை.

நாட்டில் 26.12.2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் மத்திய அரச பொது நிர்வாக அமைச்சு இடமாற்றங்கள் யாவும் 01.03.2005 வரை பிற்போடுவதாக அறிவித்தல் ஊடகங்கள் மூலமாக வெளியாகியிருந்தது. இதுவிடயதை மாகாண சபை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது அது மத்திய அரச இடமாற்றம் எனவும், மாகாண சபை இடமாற்றம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிக்கு இடமாற்றப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையோர் 01.01.2005 முதல் இடமாற்றத்தில் செல்லவேண்டும் எனத் தெரிவித்தார்கள். அத்துடன் ஊடகங்கள் மூலமும் அறிவித்தல் வெளியாகியது. சில அலுவலகங்களுக்கு தொலைநகல்(Fax) மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டது. சில திணைக்களங்கள் சிலரை விடுவித்தும் அதிகாரிகளின் அனுசரணையுடையவர்கள் இற்றைவரைதானும் விடுவிக்கப்படவில்லை.

2004ஆம் ஆண்டு இடமாற்றத்தில் இடமாற்றம் செய்யப்பட்ட இடமாற்றம் பிற்போடப்பட்ட சிலரது இடமாற்றமும் எதுவித அறிவித்தலும் கிடைக்காத சிலரது இடமாற்றமும் 2005முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தும் இன்றைவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவர்களின் பட்டியலை எம்மால் வெளியிடமுடியும். 2004ஆம் ஆண்டு இடமாற்றத்தில் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படவேண்டியவர்கள் என இடமாற்றப்பட்டவர்கள் சில திணைக்கள அதிகாரிகளின் வேண்டுதலில் இரத்துச் செய்யப்பட்டவர்கள் 2005ஆம் ஆண்டு இடமாற்றத்தில் உள்ளடக்கப்படவில்லை. இவர்களின் பட்டியலும் உள்ளது.

இடமாற்றப்பட்டவர்கள் இடமாற்றத்தில செல்லாதுவிட்டால் சம்பளம் நிறுத்தப்படும் என அறிவித்தலில் குறிப்பிடப்பட்டது. இது ஓர் ஒழுங்கான நிர்வாக அறிவித்தல் அல்ல. திணைக்களத் தலைவர்கள் இடமாற்றப்பட்டவர்களை உரிய திகதியில் விடுவித்தல் அவர்களது கடமையாகும். அதற்குப் பதில் இடமாற்றம் வழங்கப்படாவிடில் அதற்குரிய பதிலீடு வழங்கவேண்டியது இடமாற்றத்தை மேற்கொண்ட அமைச்சு திணைக்களத்தின் கடமையாகும். 2004,2005 இடமாற்றங்களினால் உத்தியோகத்தர்களின் பயனுறுதிவாய்ந்த சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான அலுவலக வேலைகள் குழப்பமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

மாகாண சபை அமைப்பு முறைக்கு முன்னர் இடமாற்றம் செய்யும்போது இடமாற்றும் திட்டம் வகுக்கப்பட்டு வர்த்தமானி மூலமும் சுற்றறிக்கைகள் மூலமும் ஊழியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவந்துள்ளது. இப்படியான அறிவித்தல்களின் பிரதிகள் எம்மால் உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி அனுப்பப்பட்டுள்ளது.

இடமாற்றப்படுவர்களின் பாதிப்பு அவர்கள் சார்ந்துள்ள தொழிற்சங்கங்கள் மூலமே முன்கொண்டுவரமுடியும். எனவே, இடமாற்றம் தொழிற்சங்கங்களைக் கலந்து ஆலோசித்து மேற்கொள்ளப்படவேண்டும். எமது சேவைக்காலத்தில் இப்படிப்பட்ட இடமாற்றத்தை நாம் காணவில்லை. இது ஒரு மனித உரிமை மீறலான நடவடிக்கையாகும்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இடமாற்றம் தொடர்பாக உரிய இடமாற்றத் திட்டத்தை வகுத்து அதற்கமைய செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தற்போது மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக பதவியேற்றிருக்கும் ஏ.கே.பத்மநாதன் அவர்கள் மேற்கொள்வார் என எதிர்பார்க்கின்றோம். (ஜ-111)

# மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு – கிழக்கு மாகாண சபை

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ." கடன் இல. 2043 - SRI (SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் இல. 05

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்ட (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ.") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/CAARP/ED/10 | *மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 110'X25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல்.* | M6 | 51,000/- |
| 02 | JF/CAARP/ED/13 | *மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் 90'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல்.* | M7 | 35,000/- |
| 03 | JF/CAARP/HS/06 | *தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்திய சாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியின் விடுதி புனரமைத்தல் – கட்டம் 2 – தொகுதி 1.* | M7 | 33,000/- |
| 04 | JF/CAARP/HS/06 | *தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் சமையல் அறை மற்றும் மருந்துகள் களஞ்சியப்படுத்தும் அறை புனரமைத்தல் – கட்டம் 2 – தொகுதி 2.* | M7 | 33,000/- |
| 05 | JF/CAARP/ED/24 | *சென்.ஜோன்ஸ் கல்லூரியில் 20'X40' அளவுடைய நூலகக் கட்டடம் மீளமைத்தல்.* | M7 | 36,000/- |
| 06 | JF/CAARP/ED/25 | *பொலிகண்டி சைவத்தமிழ் கலவன் பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் உள்ளடங்கலாக 110'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல்.* | M6 | 53,000/- |
| 07 | JF/CAARP/ED/26 | *வல்வெட்டித்துறை ஏ.எம்.ரி.எம்.எஸ். இல் அதிபர் அலுவலகம் உள்ளடங்கலாக 110'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல்.* | M6 | 50,500/- |
| 08 | JF/CAARP/ED/27 | *உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் 60'X25' அளவுடைய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் பூரணப்படுத்தல்.* | M8 | 17,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i) நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   iv) "இக்ராட" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.
   vi) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல்வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARP வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021 - 2223625, தொலைநகல்: 021 - 2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk.
6. ஒப்பந்த ஆவணங்கள் வைகாசி மாதம் 4ஆம் திகதி முதல் வைகாசி மாதம் 18ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3மணி வரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாகப் பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள **"தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்"** இற்கு வைகாசி மாதம் 27ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் வைகாசி மாதம் 16ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஷ், தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.** (சி-42634)(26-18-34)

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்
## இல. 5 விடைகள்

நேற்றைய 'உதயனில்' வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.5 இற்கான விடைகள் வருமாறு:-

வினாத்தாள் - I

(01) 2 (02) 2 (03) 1 (4) 2 (5) 1 (6) 2 (7) ◎ ⊕ (8) ⊞
(9) 2 (10) 1 (11) 4 (12) 2 (13) 2 (14) 1 (15) 2 (16) 3
(17) 2 (18) 2 (19) 1 (20) வேகமாக (21) வாசித்துக்கொண்டு
(22) 3 (23) 1 (24) 1 (25) 1 (26) 3 (27) பூசனி (28) வெண்டி
(29) 5 (30) 5 (31) 3 (32) 4 (33) 2 (34) 4 (35) 2 (36) 4
(37) 1 (38) 2 (39) 16 (40) 243

வினாத்தாள் - II

(01)
1) நத்தை
2) இலைகள், தண்டுகள்
3) உண்பேன், போவேன்
4) நீண்ட, சிறிய
5) Head
6) Eyes
7) Eat / Eating
8) Two
9) No
10) இரவு
11) குறுகிய 12) வெறுப்பு
13) வா 14) விழிகள் / நயனங்கள்
15) மேனி / யாக்கை / மெய் / தேகம்
16) தருக்கள்
17) வெளிச்சம்
18) எதிர்காலம்
19) நான் / எனது / எனக்கு
20) எங்களது / எமது
21) பக்கத்திலும்
22) இலைகளை / தண்டுகளை / தலை / உணர்கொம்பு / எலும்பு

(02)
1. தளவாடி / முகம்பார்க்கும் கண்ணாடி
2. பல வர்ண ஒளியை
3. பச்சை, நீலம், கருநீலம்

(03)
1) (✓) 2) (×) 3) (×) 4) (✓) 5) (✓) 6) (×) 7) (✓)
8) (×) 9) (✓) 10) (×)

(04)
1) 1 / 625 ml 2) 20 ml 3) 700 ml 4) 220 cm 5) 38 6) 320
7) 370 8) 750 mm 9) 275 ரூபா 10) 100 ml

(05)
1) இரட்டைச்சுழி 2) ஈரிழை 3) தனியிழை 4) நிரலை

(06)
1) அகத்தி 2) ஆடாதோடை 3) அறுகம்புல் 4) ஆமணக்கு

(07)
1) சேர் பொன் இராமநாதன்
2) ஈ.ஏ. குணசிங்க
3) எம்.சி.சித்திலெப்பை
4) அநாகரிக தர்மபால

(08)
1) கரபந்தாட்டம்
2) பூப்பந்தாட்டம்
3) வலைப்பந்தாட்டம்
4) காற்பந்தாட்டம்

(09)
1) ஆசிரியர் 2) ஆசிரியை

(10)
1) களுலால்ல 2) bபத்

(11) பொருத்தமான வசனங்கள்
(12) 1) கம்பளித் தையல் 2) சிறுநூலோடி
(13) பொருத்தமான வசனங்கள்

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I :
40x2 ½ = 100 புள்ளி

வினாத்தாள் II :

1) 22 புள்ளிகள் 2) 5 புள்ளிகள் 3) 10 புள்ளிகள்
4) 20 புள்ளிகள் 5) 4 புள்ளிகள் 6) 4 புள்ளிகள்
7) 4 புள்ளிகள் 8) 4 புள்ளிகள் 9) 2 புள்ளிகள்
10) 2 புள்ளிகள் 11) 8 புள்ளிகள் 12) 2 புள்ளிகள்
13) 12 புள்ளிகள்

மொத்தம் - 99 புள்ளிகள்

உறுப்பாக விடை எழுதி இருந்தால் 1 புள்ளி வழங்குக.

ACTION CONTRE LA FAIM

## ADVERTISEMENT FOR IMMEDIATE ANSWER

*1. WANTED STORE/WAREHOUSE IN JAFFNA AND AREA*

◆ Action Contre la Faim (International Non-Governmental Organisation) require on rent a store/or /warehouse in Jaffna's area and surrounding (less than 5 km)
Spacious place near Jaffna, that will serve for the storage of our material

**Contact to:**
Action Contre la Faim/Jaffna, No.5, Racca Road,
Jaffna.
Phone number: 222 24 65

2. WANTED *OFFICE IN JAFFNA*

◆ Action Contre la Faim (International Non-Governmental Organisation) require on rent An office or a great house with minimum 6 Rooms in Jaffna's area

**Contact to:**
Action Contre la Faim / Jaffna.
No.5, Racca Road, Jaffna.
Phone number: 222 2465.

(44944)(26)

## தென்மராட்சி கரபந்தாட்டம்:

# மோகனதாஸ், ஒளிர் அணிகள் பிரதேச சம்பியன்களாகத் தெரிவு

வலி.வடக்கு,மே4

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் ஒளிர் (முடியப்பு) விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று பிரதேச சம்பியன்களாகின.

இப்போட்டிகள் யாவும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றன.

ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்து செற்றுகள் கொண்ட இப்போட்டியில் முதல் செற்றில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 25:19 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற மூன்று செற்றுக்களை மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து 25:24, 25:23, 25:22 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்று செற்றுகளைத் தொடர்ந்து மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிகொண்டமையால் 5ஆவது செற் விளையாடப்படவில்லை.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் கொடிகாமம் ஒளிர் (முடியப்பு) விளையாட்டுக் கழகமும் சாவகச்சேரி சிறிமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று செற்றுகள் கொண்ட போட்டியில் முதல் செற்றில் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் 25:23 என்ற புள்ளிகளினால் வெற்றி பெற்றது.

அடுத்த இரண்டு செற்றுக்களையும் ஒளிர் விளையாட்டுக் கழகம் 24:26, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (3-86)

## சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.வை.எம்.சி.ஏ. வருடா வருடம் அங்கத்தவர்களுக்கு இடையில் நடத்திவரும் சதுரங்க சுற்றுப்போட்டிகளின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றி பெற்றோர் விவரங்கள் வருமாறு:-

**ஒற்றைய ஆட்டம்**

ஆண்கள் - வி.உதயகுமார், எஸ்.வித்தியதரன்.

பெண்கள் - ஜி.சோதியாழினி, எஸ்.ராதிகா.

**14 வயதுப் பிரிவு**

ஆண்கள் - வி.பாவலன், ஜெ.ஜெனிபேட்.

பெண்கள்- என்.கௌசிகா, என்.சாகித்தா.

**18 வயதுப் பிரிவு**

ஆண்கள்- ரி.கமலகாந்தன், எம்.யூட்ஜெனின்.

பெண்கள் - எஸ்.சிந்துஷா.

**16 வயதுப் பிரிவு**

ஆண்கள் - வல்லவக்குமரன், எம்.யூட்டெனிஸ்.

பெண்கள்- எஸ்.ராதிகா, ஆர்.பாவதரணி.

**10 வயதுப் பிரிவு**

ஆண்கள் - எ.அஸ்ரின், எஸ்.சண்ஜெயன்.

பெண்கள் - எஸ்.பிரியங்கா, பி.மாதங்கி.

**12 வயதுப் பிரிவு**

ஆண்கள் - என்.லவலோஷன், எச்.சோலமன் ராஜராம்.

பெண்கள் - எம்.சாந்தமோரின், ஐ.பிரதீபா. (3-190)

# நல்லூர் பிரதேச தடகளப் போட்டி அரியாலை வி.க. சம்பியனானது

யாழ்ப்பாணம்,மே4

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடந்த தடகளப் போட்டிகளில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கூடுதலான புள்ளிகளைப் பெற்று பிரதேசச் சம்பியனாகியது.

இந்தப் போட்டிகள் கடந்த வெள்ளி,சனி ஆகிய தினங்களில் யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இந்தப் போட்டிகளில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 41 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 40 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றது.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**துடுப்பாட்டம்**

ஆண்கள் - லெவின் ஸ்ரார் வி.க., அரியாலை ஐக்கிய வி.க.

பெண்கள்- கே.சி.சி.சி.வி.க., துர்க்கா வி.க.

**உதைபந்தாட்டம்**

ஆண்கள் - கலாமன்றம் வி.க., பொற்பதி வி.க.

**வலைபந்தாட்டம்**

பெண்கள் - கே.சி.சி.சி. வி.க., துர்க்கா வி.க.

**எல்லே**

ஆண்கள் - காந்தி வி.க., துர்க்கா வி.க.

பெண்கள்- கே.சி.சி.சி. வி.க, அரியாலை ஐக்கிய வி.க.

**கபடி**

ஆண்கள் - துர்க்கா வி.க., காந்தி வி.க.

**கரபந்தாட்டம்**

ஆண்கள் - அரியாலை ஐக்கிய வி.க., ஜொலி ஸ்ரார் வி.க.

சிறந்த வீர, வீராங்கனைகள் விவரம் வருமாறு:-

**துடுப்பாட்டம்**

**ஆண்கள்**

சிறந்த துடுப்பாட்ட வீரர் - லெவின்ஸ்ரார் வி.கவைச் சேர்ந்த ரி.சர்வானந்த்.

சிறந்த பந்துவீச்சாளர் - லெவின்ஸ்ரார் வி.கவைச் சேர்ந்த ரி.சர்வானந்த்.

சிறப்பு பந்துத் தடுப்பாளர் - லெவின்ஸ்ரார் வி.கவை சேர்ந்த எஸ்.சுகுமார்.

சிறந்த ஆட்ட நாயகன் - லெவின்ஸ்ரார் வி.கவைச் சேர்ந்த ரி.சர்வானந்த்.

**பெண்கள்**

சிறந்த பந்து வீச்சாளர் - கே.சி.சி.சி.வி.கவைச் சேர்ந்த ஆர்.சம்சக்கா.

சிறந்த துடுப்பாட்ட வீராங்கனை - கே.சி.சி.சி. வி.கவைச் சேர்ந்த ஈ.வினோஜா.

சிறந்த பந்துத் தடுப்பு வீராங்கனை - கே.சி.சி.சி.வி.கவை சேர்ந்த எஸ்.சண்முகாசினி.

சிறந்த ஆட்டநாயகி - கே.சி.சி.சி.வி.கவைச் சேர்ந்த எஸ்.வினோஜா.

**உதைபந்தாட்டம்**

ஆண்கள் - சிறந்த வீரர் கலாமன்ற வி.க. வைச்சேர்ந்த எஸ்.ஐங்கரன்.

**எல்லே**

**ஆண்கள்**

சிறந்த துடுப்பாட்ட வீரர் - காந்தி வி.கவை சேர்ந்த எம்.விஜிதன்.

சிறந்த எல்லே களத்தடுப்பாளர் - துர்க்கா வி.கவை சேர்ந்த எஸ்.தேவலிங்கம்.

**பெண்கள்**

சிறந்த எல்லே துடுப்பாட்ட வீராங்கனை-கே.சி.சி.சி. வி.கவைச் சேர்ந்த ஈ.வினோஜா.

சிறந்த எல்லே களத்தடுப்பாளர்- அரியாலை ஐக்கிய வி.கவை சேர்ந்த பீ.நிலாந்தி.

**கபடி**

ஆண்கள் - சிறந்த வீரர் துர்க்கா வி.கவைச் சேர்ந்த எஸ்.திவாகரன்.

**கரபந்தாட்டம்**

**ஆண்கள்**

சிறந்த வீரர் அரியாலை ஐக்கிய வி.கவை சேர்ந்த ரி.துஸ்யந்தன்.

சிறந்த சுவட்டு வீரன் - அரியாலை ஐக்கிய வி.கவைச் சேர்ந்த எஸ்.சிறிகாந்தன் (100 மீற்றர் ஓட்டம்).

சிறந்த சுவட்டு வீராங்கனை - அரியாலை ஐக்கிய வி.கவைச் சேர்ந்த ரி.கஸ்தூரி (100 மீற்றர் ஓட்டம்).

சிறந்த மைதான வீரர் - வினைஸ் வி.கவைச் சேர்ந்த எஸ்.சஞ்சீவ் (நீளம் பாய்தல்).

சிறந்த மைதான வீராங்கனை - அரியாலை வி.கவை சேர்ந்த ரி.கஸ்தூரி (நீளம் பாய்தல்).

2005 ஆம் ஆண்டிற்கான சிறந்த மெய்வன்மை வீரராக வினைஸ் வி.கவைச் சேர்ந்த எஸ்.சஞ்சீவ் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

# கேகாலை சதுரங்கச் சுற்றுப்போட்டி யாழ்.அணியில் பங்குபற்றுவோர்

யாழ்ப்பாணம்,மே4

கேகாலையில் நாளை ஆரம்பமாகவுள்ள தேசிய மட்டச் சதுரங்கச் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான யாழ்.மாவட்ட அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

போட்டிகள் 8,10,12,14,16,18 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த இருபாலருக்கும் நடைபெறவுள்ளன.

8,10,12 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை வியாழக்கிழமையும் 14,16,18 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமையும் கேகாலை மகா வித்தியாலயத்தில் போட்டிகள் இடம்பெறவிருக்கின்றன.

தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்களின் விவரம் வருமாறு:-

**8 வயதுப் பிரிவு**

ஆண்கள் - அலோசியஸ், அஜின்ஸரின், ரி.தனுசியன், மி.ஜெயசீலன்.

பெண்கள்- மணிசேகரன் தரணியா.

**10 வயதுப் பிரிவு**

ஆண்கள்- இராமச்சந்திரன் சாம் அபிஷேக், சிறிகஜேந்திரா கஜானன், இளங்குமரன் பிரசாந்தன்.

பெண்கள் - சுந்தரலிங்கம் பிரியங்கா, பாஸ்கரன் மாதங்கி, குகநாதன் குணசிகா.

**12 வயதுப் பிரிவு**

ஆண்கள் - நகுலநாதன் லவலோஜன், சிவகுமார் மேகலாதன், இளங்குமரன் பார்த்தீபன், ஜெ.ஜெயமாருதி, எம்.கஜீபன்.

பெண்கள் - ஞானசேகரம் திவ்வியா, ஜெயபாலசிங்கம் டிலுஷா, மேரியோசெப் சாந்தமாறின்.

**14 வயதுப் பிரிவு**

ஆண்கள் - சத்தியசீலன் கோபிகாந்தன், சோதிநாதன் விஷ்ணுச்சந்தர், கணநாதபிள்ளை ஏகாந்தன், பி.ரஜீவன், ஜெ.ஜெயநேரியோ.

பெண்கள் - நகுலநாதன் கௌசிகா, கனகலிங்கம் திவ்வியா, பாலசுந்தரம் ஆரணி.

**16 வயதுப் பிரிவு**

ஆண்கள் - சிவகுருநாதன் வல்லவகுமரன், கனகசபை எழில்வேல், றோபேட் மரியதாஸ் ஜெறூசன்.

பெண்கள் - புஸ்பராஜா சுகன்ஜா, ரவீந்திரன் பவதாரணி, பேதுருப்பிள்ளை பறேமகங்கா.

**18 வயதுப் பிரிவு**

ஆண்கள் - எஸ்.சுலக்சன், முருகையா குகதீபன், பா. ஜெயராம்.

பெண்கள் - சிவகுருநாதன் வித்தியாதாரிணி, சிவசக்திவேல் சிந்துஜா, நடராசபிள்ளை சுதாசினி. (3-203)

## எவரெஸ்ட் கிண்ண உதைபந்தாட்டம்:

# மன்னார் லீக் அணியை வென்றது பருத்தித்துறை லீக்

யாழ்ப்பாணம், மே4

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினரால் 19 வயதிற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் எவரெஸ்ட் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது.

கடந்தவாரம் மன்னார் ஸ்ரேடியத்தில் நடைபெற்ற போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 3:1 என்ற கோல் அடிப்படையில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றிகொண்டு இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி இரண்டாம் சுற்றில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அணியுடன் மோதவுள்ளது. இப்போட்டி பருத்தித்துறை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (3-190)

# மேசைப்பந்தாட்டத்தில் வெற்றிபெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம்,மே.4

யாழ்.கல்வி வலயம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:-

**மேசைப்பந்து**

**19 வயதுப் பிரிவு**

ஆண்கள் - யாழ்.மத்தியகல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி.

பெண்கள் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம். (3-190)

# அபுதாபி கண்காட்சி ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தியது பாக்.

அபுதாபியில் நடைபெறும் முத்தரப்புக் கண்காட்சிக் கிரிக்கெட் தொடரில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் 76 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றியடைந்தது.

இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணிக்கு மார்வன் அத்தபத்து தலைமை தாங்கினார்.

**விளையாட்டு**

முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடிய வீரர்களே இந்த ஆட்டத்திலும் களமிறங்கினர்.

மறுபுறம் இன்சமாம் தலைமையிலான பலம் மிக்க பாகிஸ்தான் அணி களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வீரர்களின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. குறிப்பாக அணியின் உபதலைவர் யூனுஸ்கான், சொயிப் மலிக் சிறப்பாக ஆடினர்.

பாகிஸ்தான் அணி சார்பாக யூனிஸ்கான் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும் மலிக் 68 ஓட்டங்களையும் பட் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரசல் ஆர்னல்ட் 3 விக்கெட்டுக்களையும் தில்ஷான் 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, ருச்சிர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்.

வெற்றி இலக்காக 291 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 46.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்படி இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 76 ஓட்டங்களால் வெற்றியடைந்தது.

இலங்கை அணியின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் செயற்பாடு இந்த ஆட்டத்தில் மிகமோசமாக இருந்தது. அணி சார்பாக ஜயவர்த்தன 64 ஓட்டங்களையும் விஜேகோன் 58 ஓட்டங்களையும் கலவிட்டிகொட 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ராவோ 3 விக்கெட்டுக்களையும் அர்ஷாத்கான், மலிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். இந்த ஆட்டத்தின் ஆட்டநாயகனாக யூனுஸ்கான் தெரிவுசெய்யப்பட்டார். (க-3)

# வெற்றியை விட்டுக்கொடுத்த மலிக்கிற்கு ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடத் தடை

கிரிக்கெட் ஆட்டத்தில் விட்டுக்கொடுத்து ஆடிய சொயிப் மலிக்கிற்கு ஓர் டெஸ்ட்டில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான மலிக் உள்ளூரில் நடந்த 20/20 கிரிக்கெட்டில் சியால்கோட் அணியின் தலைவராக இருந்தார். அந்த அணி கராச்சி ஸீப்ரா அணியிடம் வேண்டுமென்றே தோற்றது.

வெற்றியை விட்டுக்கொடுத்து ஆடியதை சொயிப் மலிக் பகிரங்மாக ஒப்புக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து சொயிப் மலிக்கிடம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க ஹரூண் ரஷித், ஷபிக் அகமது, அஸ்கர் ஹைடர் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

விசாரணைக்குழு முன்பு சாட்சியம் அளிக்கையில் தனது தவறுக்கு மலிக் வருத்தம் தெரிவித்தார். இருப்பினும் அவருக்கு ஒரு டெஸ்ட்டில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டது. அத்தோடு, 2 ஒருநாள் ஆட்டச் சம்பளத்தில் 75 சதவீதம் அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இத்தடை காரணமாக மலிக் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடமாட்டார். (க-3)


வழங்கப்பட்ட கட்டுமரங்களையும் பயனாளிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: சி.சுந்தரலிங்கம்)

# கடற்றொழிலாளர்களுக்கு கட்டுமரங்களை 'ஊற்று' நிறுவனம் வழங்கியது

கரவெட்டி,மே4

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தும்பளை கிழக்கு கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மீள ஆரம்பிக்கும் பொருட்டு 'ஊற்று' நிறுவனம் 13 கட்டுமரங்களை வழங்கியுள்ளது.

40 கட்டுமரங்களும் வலைகளும் வழங்க நடவடிக்கை எடுத்தபோதும், கட்டுமரங்கள் செய்வதற்குரிய 'அல்மீசியா' மரங்களிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், முதற்கட்டமாக 13 கட்டுமரங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், மிகுதி விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் 'ஊற்று' நிறுவனப் பொறுப்பாளர் எஸ்.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

(8-70-204)


## மரண அறிவித்தல்

### செல்வி சிறிஸ்கந்தராசா மயூரி (சங்கானை)



பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிறிஸ்கந்தராசா மயூரி 01.05.2005 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அரியகுட்டி சிறிஸ்கந்தராசா - நகுலேஸ்வரி தம்பதிகளின் அருமை மகளும் கஜனி (கனடா), சிறிதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜீவதாசனின் (கனடா) மைத்துனியும் அரியமலர், அமரர் நகுலேஸ்வரன், விக்னேஸ்வரன் (அளவெட்டி), மகேஸ்வரன் (ஜேர்மனி), முத்தையா (ஜேர்மனி), செல்வராஜ் (சுவிஸ்), கிருபானந்தன் (AGGREKO - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மருமகளும் ஞானேஸ்வரி (இந்தியா), விக்னேஸ்வரி (ஜேர்மனி), சிவக்கொழுந்து (மல்லாவி) ஆகியோரின் பெறாமகளும் ஜருஷன் (கனடா), ஹரணி (கனடா) ஆகியோரின் சித்தியும் காலஞ்சென்ற அரியகுட்டி பாக்கியம் மற்றும் தாமோதரம்பிள்ளை அரியமலர் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.சிறிஸ்கந்தராசா (தந்தை).
(Cool Air, k.k.s)

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

(சி42644) (29-18-16)


## கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை நிலையம்

செம்பியன்பற்று,மே4

மருதங்கேணிச் சந்தியின் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி கடற்றொழில் உபகரணங்கள், நுகர்ச்சிப் பொருள்கள் விற்பனை நிலையமொன்றை அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

(8-36)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொதுஅறிவுப் பரீட்சை

கோண்டாவில்,மே4

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொதுஅறிவுப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது. பரீட்சைக்கு அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகந்தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இதுவரை முன்பள்ளி விரப்படிவங்களைப் பூர்த்திசெய்யாதவர்கள் நாளை வியாழக்கிழமை படிவங்களைப் பூர்த்தி செய்து கையளிக்குமாறு நல்லூர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி வி.மாலதிதேவி கேட்டுள்ளார். (8-49)


## இப்போது யாழ்ப்பாணத்தில்

### கிளைகள் பலவுள்ள கணனி நிறுவனத்துக்கு ஆள்கள் தேவை

★ கணனி விரிவுரையாளர்
★ கணனி ஆய்வுகூட உதவியாளர்

பின்வரும் கற்கைநெறிகளுக்கு
Programming
Diploma in Accounting
Diploma in internet technology
Multimedia
Diploma in Hardware Engineering
Diploma in Web Designing

சம்பந்தப்பட்டதுறைகளில் அனுபவமுள்ளவர்கள் மட்டும் வரவும்.

முடிவு திகதி: 10.05.2005

வரும்போது சகல சான்றிதழ்களையும் கொண்டுவரவும்.

விளம்பர இல. 2577
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(44959)(29-18-16)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### கந்தர் வைத்தியலிங்கம்

வையத்துள் 06.08.1918 — வானத்துள் 04.04.2005

அன்புடன் அரவணைத்தே
ஆசையுடன் வளர்த்தீர்
நன்றெனவே வாழவைத்தீர்
நற்புகழும் கொண்டீர்
குன்றெனவே உயர்ந்து நின்றீர்
குவலயத்தோர் போற்ற
இன்றெம்மைப் பிரிந்து
ஈசன்பதம் அடைந்தீர்
என்றும் உமைமறவோம்
எண்ணி ரிதம் வாழ்வோம்

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.05.2005) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகிறது.

அத்தருணம் இந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு, கோண்டாவில்.
- குடும்பத்தினர்.
(44960)(29-18-16)



## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்
### ஆறுமுகம் இரத்தினம்

மலர்வு 01.06.1934 — உதிர்வு 15.04.2004

எம் குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்து
பாசமலராய் வாழ்ந்து மறைந்து போனாலும்
உம் நினைவுத் துளிகள் என்றும் – எமது
நெஞ்சங்களில் நின்று நிலைத்திருக்கும்!

மாப்பாண ஊரி,
காரைநகர்.
(44962)(29-18-16)
திருமதி இ.நல்மணி (மனைவி),
குடும்பத்தினர்.



## வெளிநாடுகளில் நீங்கள் உழைக்கும் பணத்தினை மக்கள் வங்கியினூடாக தாய்நாட்டிற்கு அனுப்பி இலட்சக்கணக்கில் பரிசுகளை வெல்லுங்கள்.

රට සල්ලි
වාසනාපත

வெளிநாட்டு பண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு
Foreign Remittance Lucky Draw

1 வது பரிசு - ரூபா 2.5 மில்லியன்
2 வது பரிசு - ரூபா 1 மில்லியன்
3 வது பரிசு - ரூபா 500,000

மக்கள் வங்கி

உங்களுக்காக - நாட்டிற்காக



## எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப்பிரிவு அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்தும்



தங்கக் கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியின்
மின்னொளியிலான விளையாட்டு ஆரம்பம் .

விளையாட்டு வரிசையில் அரையிறுதி ஆட்டங்கள், இறுதியாட்டங்கள் 40 வயதிற்கு மேற்பட்ட கிளி./முல்லை./யாழ். அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்டமும் காட்சிப் போட்டியாக மகளிருக்கான உதைபந்தாட்டமும் ஆரம்பம்.

காலம் 10.05.2005 செவ்வாய் மாலை 6 மணிக்கு
மேலதிக விவரங்கள் உதயனில் பிரசுரமாகும்
நுழைவுக்கட்டணம் 20ரூபா

ஊடக அனுசரணை உதயன்

உதைபந்தாட்ட லீக் வலிகாமம்

# கிழக்கின் கல்விநிலையைச் சீர்செய்ய இந்தியா அதிக கவனம் செலுத்தும்

கொழும்பு,மே4

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கிழக்குப் பகுதியில் கல்வி நடவடிக்கைகளைச் சீர்செய்து முன்னெடுப்பதில் இந்தியா அதிக கவனஞ்செலுத்தும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண்.

இந்திய அரசின் உதவியுடன் கிழக்கு மாகாணத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்பனவற்றின் பாவனைக்காக வாகனங்கள் வழங்கும் நிகழ்வு, கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள இந்திய இல்லத்தில் இந்தியத் தூதுவர் நிருபமராவ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இரு 'டாட்டா' பஸ்களும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு காரும் இந்திய வெளியுறவுத்துறைச் செயலரால் துணைவேந்தர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் அவர் கூறியதாவது:-

இந்தியாவின் மனிதாபிமான செயற்பாட்டின் அங்கமாகவே இந்த பஸ் வண்டிகளும், காரும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்களது சுதந்திரமான கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள இவை உதவிபுரியும்.

அண்மையில் நான் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்தேன். அங்கு ஏற்பட்டிருக்கும் அழிவுகள் எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தின.

கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையினால் உயர் கல்வித்துறை பாதிக்கப்பட்டுள்ளது. அதனை மீளக்கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டும்.

பாதிக்கப்பட்டுள்ள கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதறகு இந்திய - இலங்கை நட்புறவு அமைப்பின் மூலம் எமது அரசு முக்கிய உதவிகளை வழங்கும்.

ஆழிப்பேரலையின்போது பாதிக்கப்பட்ட இளைஞர்களின் வாழ்வை வழமை நிலைக்குக் கொண்டுவரும்பொருட்டு அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புத் திட்டங்களை எமது அரசின் உதவியுடன் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

தொழில்வாய்ப்புக்களை இந்தியா - இலங்கை பவுண்டேசன் மூலம் ஏற்படுத்திக்கொடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையின்போது பாதிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இந்திய அரசு அதிக கவனம் எடுக்கவுள்ளது - என்றார் அவர்.

இவ்வைபவத்தில் அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், ஏ.எச்.எம்.பௌசி, பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ஹுசைன் இஸ்மாயில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரவீந்திரநாத் மற்றும் பதிவாளர்கள், பீடாதிபதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(த-க)



## கண்ணீருடன்...

ஈழத்தின் தலைசிறந்த ஒப்பனை, புகைப்படக் கலைஞனும் எமது மன்றத்தின் ஆரம்பகால நாடகங்களுக்கு ஒப்பனைக் கலைஞனாகப் பணியாற்றியவருமாகிய

**அமரர் பிரான்சிஸ் ஸ்ரனிஸ்லொஸ்**

**(ஸ்ரனி மாஸ்ரர்)**

அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதேவேளை, பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C-42645)(38-14-12-45) இயக்குநர், அங்கத்தவர்கள், திருமறைக்கலாமன்றம்.

## மரண அறிவித்தல்

### கதிர்த்தம்பி தருமராசா

**(தருமு - நயினாதீவு)**

3 ஆம் வட்டாரம், நயினாதீவைப் பிறபபிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி தருமராசா அவர்கள் 02.05.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகநாதன் - சிவபாக்கியம் தம்பதியினரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற சிவரூபவதியின் அன்புக் கணவரும் வினோதினி, ஸ்ரீகாந்த் (லண்டன்), சதீசன் (வர்த்தகர்), உஷாந்தினி, கஜவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகுலனின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற அகிலாண்டநாயகி, குணநாயகி, உதயநாயகி, புஸ்பராசா (சுவிஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா, பத்மலோஜினி, கோகுலராசா, ருகுணாவதி (லண்டன்), நாகாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற தனஞ்ஜெயராசா தங்கராஜா (பூரணி ஜுவல்லர்ஸ், கொழும்பு), சுப்பையா, காலஞ் சென்ற சபாநாதன், ஜெயரரம், சிவராசா, சரோஜாதேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் டிலக்ஷன், கிஷாலினி ஆகியோரின் பாசமிகு பேரனும் தில்லைநாதன், சபாநாதன் (லண்டன), சிவலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகலனும் கிரிஷாப்பாள், ஜெயந்தி, நந்தாஜினி ஆகியோரின் மைத்துனர் வழி சகோதரரும் கமலாசினிதேவியின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2005) புதன்கிழமை நயினாதீவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*3 ஆம் வட்டாரம், நயினாதீவு.* (44957)(38-14-12-45) தகவல் : ந.கோகுலன் (மருமகன்).

# ஹொரவப்பொத்தானை பிரதேசசபை கலைப்பு

கொழும்பு,மே4

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகப் பொறுப்பில் இருந்த ஹொரவப்பொத்தானை பிரதேசசபை நேற்றுமுன்தினம் இரவு கலைக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு விசேட ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று வடமத்தியமாகாணசபை முதலமைச்சர் பேட்டி பிரேமலால் திஸநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பிரதேசசபை தொடர்பாகக் கிடைத்த குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு என சில மாதங்களுக்கு முன்னரே பிரதேசசபையின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி

கோண்டாவில்,மே4

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி நெறி இம்மாதம் 14 ஆம், 15 ஆம், 16 ஆம்,17 ஆம் திகதிகளில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியில் அனைத்து ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு முன்பள்ளி இணைப்பாளர் திருமதி வி.மாலதிதேவி கேட்டுள்ளார். (த-49)

## சதுரங்கக் கருத்தரங்கு

விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநராக விரும்புவோர், போட்டி நடுவர்கள், தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே சதுரங்கத்தைப் பயிற்றுவிக்க விரும்பும் பெற்றோர் ஆகியோருக்கான சதுரங்க இரு நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளோர் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ புதிய சதுரங்க வகுப்புகள் ஆரம்பம்: 07.05.2005

★ 'சதுரங்கத்தில் இறுதியாட்டம்' நூல் விற்பனையாகின்றது.

தொடர்புகளுக்கு: GKC Academy
இல: 5, வைமன் வீதி, நல்லூர்.

(44955)(38-14-12-45)

## 4 ஆம் ஆண்டு நினைவுகளில்...



**திருமதி அருளம்மா நடராசா**

மலர்வு: 07-04-1964 உதிர்வு: 13-05-2001

திதி 04.05.2005

நான்காண்டு கரைந்தாலும் அழியாத நின் நினைவை சுமந்து நிற்கும் இதயங்கள் ஏங்குதம்மா உம்பிரிவால்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சித்தம்பாதி, கரணவாய். (44965)(38-14-12-45) -குடும்பத்தினர்.

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும் பரத், கோபிகா **4 ஸ்ருடன்ஸ்** (சீலஸ்)

நாளைமுதல் மாதவன் ஜோதிகா, ஸ்ரீதேவி, மணிவண்ணன், வினீத் நடித்த **பிரியமானதோழி**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே.)

## நாதவ்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.

ஜெய் ஆகாஷ், மிஷா, ராஜ்கிரண், செந்தில், ராதாரவி நடிக்க

**செவ்வேல்**



கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

## மனோகரா யாழ்ப்பாணம்

விஜய், ஹரிணி, வடிவேல் நடித்த

**சச்சின்**



காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

மூன்றாவது ஜனத்திரள் வாரம் ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த

**சந்திரமுகி**



காட்சிகள: 11.00 3.00 7.00 10.00. (பு.நே.)

# கலங்கரை விளக்கு இல்லை; கரைதிரும்புவதில் சிரமம்!

## வடமராட்சி மீனவர்கள் கவலை

செம்பியன்பற்று,மே4

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தின் பின் தொழில் செய்ய ஆரம்பித்துள்ள கடற்றொழிலாளர்கள் கலங்கரை விளக்குகள் இன்மையால் இரவு வேளைகளில் கரை திரும்புவதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடலில் காற்று, அனர்த்த எச்சரிக்கைகள் கிடைக்கின்றபோது உடனடியாகக் கரை திரும்புவதற்கு வெளிச்சவீடுகள் அவசியமாகும். எனினும், வடமராட்சி கிழக்கு கடற்கரையில் கலங்கரை விளக்கு இல்லாததால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என மீனவர்கள் கவலை தெரிவித்தனர். எனவே, தற்காலிகமாகவேனும் வெளிச்சவீட்டை நிறுவித்தரவேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-36)

## கடற்றொழிலாளருக்கு ஜி.ரி.இசற் உதவி

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 100 கடறறொழிலாளர்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜி.ரி.இசற்) படகுகளை வழங்கவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களில் 100 பேருக்கே படகு, வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் வலைத் தொகுதி என்பன வழங்கப்படவுள்ளன. (த-36)

## நல்லூர் பிரிவில் கட்டாக்காலி நாய்கள் இன்று பிடிக்கப்படும்

யாழ்ப்பாணம்,மே4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் இன்று கடடாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன. கோண்டாவில் கிழக்கு, டிப்போ முன்றல், அன்னங்கை வீதி போன்ற இடங்களில் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளன எனவும் - எனவே, வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்து ஒத்துழைப்பு வழங்குமாறும் நல்லூர் பிரதேச சபையின் [illegible]லாளர் கேட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### சூசை அல்பேட் (சின்ராசா)

**(S.S.R.) கடலுணவு உரிமையாளர்**



குருநகரைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சூசை அல்பேட் (S.S.R.) 01.05.2005 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை, திவ்வியம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எட்வீனம்மாவின் பாசமிகு கணவரும் அன்றூட் (அன்ரன் - பிரான்ஸ்), எட்வின் (பிரான்ஸ்), அன்ரனி (பிரான்ஸ்), யூட், வில்சன் (J.P.), கெமன்சன் (பிரான்ஸ்), தீபா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சூசை மார்க் (கனடா), சூசை மகராசம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செ.மரியதாஸ் (ஓய்வுபெற்ற அதிபர், வாடி வீடு), செ.எட்வேட் (முன்னாள் நா.உ.பிரான்ஸ்), ம.பிரான்சிஸ்கம்மா, செ.அரியற் (பிரான்ஸ்), காலஞ்சென்ற செ.அன்ரன் (S.A.N. வாடி உரிமையாளர் J.P.), செ.யோண்மேரி (S.K.M.E.), செ.சூசைதாசன் (வாடிவீடு, திருகோணமலை), செ.அமலதாஸ் (S.K.M.E), லா.தங்கம் (கனடா), ம.ஒஸ்தீனம்மா ஆகியோரின் மைத்துனரும், ம.அன்ரன் (பிரான்ஸ்), எ.கெளரி (பிரான்ஸ்), அ.கீத்தா (பிரான்ஸ்), யூ.றூபினா ஆகியோரின் மாமனாரும் அ.எடிக்கன் (பிரான்ஸ்), அ.அமிர்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ம.சின்னக்கிளி, எ.அரியராணி (பிரான்ஸ்), யோ.மரியதாஸ், அ.ஞானம், யோ.யோகம், சூ.அனஸ்ரேசியா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் அ.மெலானி (மருமகள்), காலஞ்சென்ற லா.தங்கராணி, லா.பகவத்சிங் (கனடா), லா.தங்கமாணிக்கம் (கனடா), லா.கமலநாதன் (கனடா), லா.மார்க் அன்ரனி (கனடா), லா.பிறேமகாந்தன் (கனடா), கி.பத்திமா (கனடா), ம.ராஜன் (லண்டன்), ம.புனிதன் (நோர்வே), ம.கிறிஸ்ரலா (பிரான்ஸ்), ம.குமார் (பிரான்ஸ்), ம.பிரியா (சுவிஸ்), ம.தர்ஷனி (இந்தியா) ஆகியோரின் சிறிய தந்தையும் ம.பொஸ்கோ (பிரான்ஸ்), ம.டயஸ், ம.சுலக்சனா, ம.பிரியா, ம.டயானா ஆகியோரின் பெரிய தந்தையும் ம.கொலின் (பிரான்ஸ்), ம.வலன்ரைன் (பிரான்ஸ்), ரா.விஜி, ம.லியோனிஸ் (அருட்சகோதரன்), ம.அஜந்தன் (பிரான்ஸ்), ம.யூஜின், கா.கில்டா, ப.கவிதா (பிரான்ஸ்), வி.ஜெனிதா, எ.சுதாகர் (பிரான்ஸ்), எ.றெனோல்ட (பிரானஸ்), அ.சுபன், அ.நிறுஸ்ரெலா, யோ.சபிதா, யோ.யொயசி, யோ.அலஸ்ரீன், யோ.சங்கீதா, யோ.நிருபன், அ.றோசன், அ.றொசான் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிச்சடங்கு பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

*நாவாந்துறை வடக்கு.* (44967)(38-12-14-45) தகவல் : பிள்ளைகள்.

### மவுண்மேட் கமில்ரன்



இல.620, கண்டி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட மவுண்மேட் கமில்ரன் அவர்கள் நேற்று (03.05.2005) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*620, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.* தகவல் : குடும்பத்தினர். (C-42646)(38-12-14-45)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிபந்தனையின்றி நியமனம்

## விரைவில் வழங்க அமைச்சர் பணிப்பு

காரைதீவு, மே4

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு எந்தவித நிபந்தனைகளும் இன்றி - நேர்முகப் பரீட்சை மூலம் நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கிழக்குக் கல்வி வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் சமகால கல்வித்துறைசார் பிரச்சினைகள் குறித்து கிழக்குக் கல்வி வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் ஏற்பாட்டில் நேற்று செத்சிறியாயவில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே இந்த உத்தரவை அமைச்சர் பிறப்பித்தார்.

தொண்டர் ஆசிரியர் பிரச்சினை, கடமை நிறைவேற்று அதிபர் மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் பிரச்சினை, ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் பிரச்சினை, சிங்கள ஆசிரியர் பிரச்சினை போன்ற பல சமகாலப் பிரச்சினைகளுக்குக் குறிப்பிடத்தக்க தீர்வுகள் காணப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்ணாண்டோ, மாகாண கல்விச் செயலாளர் இரா.தியாகலிங்கம், கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் ஜி. குணரத்ன, மேலதிகச் செயலாளர் தில்லை நடராஜா, பணிப்பாளர் சுனில் கன்னங்கரா ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

விரைவில் சகல தொண்டர் ஆசிரியர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடத்தி எந்த நிபந்தனையும் இன்றி நிரந்தரமாக்கப்படவிருக்கின்றனர் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் பேரியல் உத்தரவிட்டார். (த-84)

## நாடு முழுவதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பகமாகத் தெரியவந்தது.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியத்துறை பங்கு விற்பனை தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்று இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதை மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தொழிற்சங்கங்கள் கடுமையாக எதிர்த்துள்ளன.

தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் நாடு முழுவதும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கும் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கும் மேற்படி தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

### ஆர்ப்பாட்டம்

பெற்றோலியத்துறை பங்கு விற்பனைக்கு எதிராகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன் பெரும் எதிர்ப்பு நடவடிக்கையொன்றில் இன்று ஊழியர்கள் ஈடுபடவுள்ளனர்.

கூட்டுத்தாபனப் பங்கு விற்பனை தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரத்தினை அரசு விலக்கிக்கொள்ளாவிட்டால் தாம் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் குதிக்கப்போவதாகவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பிரமுகர் லஷ்மன் ஆனந்த தெரிவித்தார்.

### வேலை நிறுத்தம்

இதேவேளை, இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு தொடர்பாக இன்று அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ள அமைச்சரவைப் பத்திரத்தை விலக்கக்கோரி நண்பகல் 12 மணி முதல் நான்கு மணிநேர அடையாள வேலை நிறுத்தமொன்றை நாடு முழுவதும் நடத்தப் போவதாக மின்சார சபைத் தொழிற்சங்கப் பிரமுகரான ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தை அரசு கவனத்திற் கொள்ளத் தவறினால் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படுமென்றும் அவர் எச்சரித்தார்.

இலங்கை மின்சாரசபை மற்றும் பெற்றோலியத் துறையினரின் இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அந்தத் துறையின் சேவைகள் பெரிதும் பாதிக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, யாழ். மின்சாரசபையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது நேற்று இரவு வரை மின்தடை தொடர்பாகத் தகவல் ஏதும் தமக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## சூட்டுக்காய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுடப்பட்டபின் சடலம் வீதியில் போடப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை அடையாளங்காண்பதற்கு உதவுமாறு ஏறாவூர்ப் பொலீஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக புலன் விசாரணையை அவர்கள் மேற்கொண்டுவருகின்றனர். (3)

## வெட்டுக் காயங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது மகன் நேற்றுமுன்தினம் இரவு நாவலர் வீதியிலுள்ள நண்பர் ஒருவருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்திற்குச் சென்றார் என்றும் -

அதன் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வீட்டின் முன்பாகவுள்ள ஒழுங்கையில் பலத்த வெட்டுக்காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாகக் கிடந்தார் என்றும் - பிரஸ்தாப இளைஞனின் தந்தை தெரிவித்தார்.

நேற்று அதிகாலை தமது வீட்டிற்குள் திருடர்கள் சிலர் நுழைந்தனர் என்றும் அப்போது விழித்துக்கொண்ட தான், வீட்டின் முன்பாகவுள்ள ஒழுங்கையால் அவர்களைத் துரத்திச் சென்றபோது அங்கு தனது மகன் சடலமாகக் கிடக்கக் கண்டேன் என்றும் அவர் சொன்னார்.

இது குறித்து நேற்று அதிகாலை யாழ். பொலீஸாருக்குத் தகவல்கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் சிரைது வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தார். அதன் பின்னர் இளைஞனின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுமாறு யாழ். பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

நேற்றுக் காலை 9 மணிக்கு இளைஞனின் சடலம் யாழ். பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இளைஞனின் சடலம் கிடந்த இடத்தின் அருகில் இருந்து கத்தியொன்றும் கொட்டன்களும் பொலீஸாரால் மீட்கப்பட்டிருக்கின்றன.

இளைஞனின் முகத்தின் கன்னப்பகுதியில் ஆழமான வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. இக்கொலை தொடர்பான விசாரணைகளை யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி விக்கிரமரட்ன தலைமையிலான பொலீஸ் குழுவினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கொலையின் பின்னணி குறித்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டபோதும், கொலைக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. (த-7-30-86-202-204)

## எத்தகைய எதிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்கட்டுமானப் பணிகளுக்காகப் பொதுக்கட்டமைப் பொன்றை ஏற்படுத்துவது குறித்து அரசு தீவிர கவனம் செலுத்திவருகின்றது. தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமாயின் இவ்வாறான பொதுக்கட்டமைப்பொன்று அவசியமாகும். அது அமைதி முயற்சிகளுக்கு உந்துசக்தியாக அமையும். சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமென்றே நான் கருதுகின்றேன்.

இந்த விடயத்தைப் பொறுத்தவரை என்றுமில்லாத வகையில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கி வந்திருக்கின்றனர். அது எமக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதை அரசிற்குள்ளேயே சிலர் எதிர்க்கின்றனர். பொதுக்கட்டமைப்பு உருவானால் அரசு கவிழ்ந்துவிடுமென்று எதிர்க்கட்சிகள் எண்ணுகின்றன. அரசிற்குள்ளும் ஒருசிலர் இவ்வாறே எண்ணுவதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் இந்த வாய்ப்பை நழுவவிடாமல், எந்த எதிர்ப்பு வந்தாலும் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசு உறுதியாகவுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

## வாழைச்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக் கைக்குண்டுகளை வீசினர் என்றும், பின்னர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர் என்றும் புலிகள் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்றவேளை அலுவலகத்தில் எவரும் தங்கியிருக்காததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் -

எனினும், இந்தத் தாக்குதலின்போது அலுவலகத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் -பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் தேடுதலில் இந்தப் பகுதியில் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கிகள் இரண்டும் தொலைத் தொடர்புக் கருவிகள் நான்கும் மீட்கப்பட்டன என மேலும் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் புலிகளால் முறையிடப்பட்டதையடுத்து நேற்றுக் காலை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்டனர். (க-3)

## சிவராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், துரைரட்ணசிங்கம், வினோநோதராதலிங்கம், ரவிராஜ், சிவநாதன்கிஷோர், சிவசக்தி ஆனந்தன், மனோகணேசன், ராதாகிருஷ்ணன் ஆகியோரும் தேசியப் பத்திரிகைகளின் அனைத்து ஆசிரியர்களும், வாசுதேவ நாணயக்கார, குமார் ரூபசிங்க, சுதந்திர ஊடக இயக்கத்தின் முக்கியஸ்தரான சுனந்த தேசப்பிரிய, கலைஞரான பற்றிக் பெர்னாண்டோ, பிரசன்ன விதானகே ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

பத்திரிகையாளர் சிவராமுக்கு விடுதலைப் புலிகளால் 'மாமனிதர்' விருது வழங்கப்பட்ட பின்னரும் நேற்றைய நிகழ்வில் பெரும்பாலான சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

இந்தக் கொலைச் சம்பவத்திற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டுமெனக் கோஷமெழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், ஊடக சுதந்திரத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாகவும் குற்றஞ்சாட்டினர். ஆர்ப்பாட்டத்தின் பின்னர் முக்கியஸ்தர்களின் விசேட உரைகளும் இடம்பெற்றன.

இறுதியில் தமிழ் - சிங்கள ஊடகவியலாளர்களின் ஐக்கியத்தை வலியுறுத்திய பாடலொன்றும் ஒலிபரப்பப்பட்டது. (க-3)

IIS CITY CAMPUS

MBA

விரிவுரைகள் ஆரம்பம்

Sikkim Manipal பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டு 2005/2006 இற்கான விரிவுரைகள் 14.05.2005 முதல் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி கற்கை நெறிக்குப் பதிவினை மேற்கொண்ட மாணவர்கள் 12ம் திகதிக்கு முன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் புதிய மாணவர்களும் 12.05.2005 வரை பதிவினை மேற்கொள்ளமுடியும

Director
IIS City Campus,
# 181, Navalar Road, Jaffna.
☎021 222 8060

இறுதிக் கருத்தரங்கு

★ A/L 2005 மாணவர்களுக்கு
★ C.G.T (பொதுச் சாதாரண பரீட்சை) Fri. 8 a.m.
★ இரு இலவச வழிகாட்டி நூல்
★ ஒரு இலவச கையேடு
★ பதிவுக்கட்டணம்100/=
★ வியாழன் வரை பதிவு இடம்பெறும்.
★ Brightman நாவலர் வீதி
★ P.உமாசங்கர் & கமல்தாசன்

IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 07.05.2005
பிரிவு II : 09.05.2005
பகல் 10.00 மணி

Diploma Courses
Dip in Microsoft Office
Dip in Internet Technology
Dip in Desk Top Publishing
Dip in Hardware Engineering
Dip in Visual Basic - Programming
Dip in Java Programming

தலைமை அலுவலகம் : # 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
• NMMV Road, Nellirdy
• Sangaththanai, - Chavakacheheri

Hardware Workshop

PC Maintenance & Trouble Shooting

கணனிப் பராமரிப்பும் திருத்தியமைத்தலும்

2 Days 3Hours Per Day

இம்மாதம் 7,8ஆம் திகதிகளில் கட்டணம் 500/=மட்டுமே

14 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்

திறமையான மாணவருக்கு MCSE கற்கைக்கான புலமைப்பரிசில்

பதிவுகள் 06-05-2005இற்கு முன்னர் நேரில்

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் நேரில், MCS,324 Palaly Road, Jaffna. ,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### சாரங்கபாணி தேவதாசன்



பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் காரைநகர் குருமனையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சாரங்கபாணி தேவதாசன் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு நாளை (05.05.2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் குருமனையில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தென்னிந்தியத்திருச்சபை, குருமனை , காரைநகர்.
(44970)(38-12-45-14)

தகவல்: மருமகன் - வண.பி.தேவதாஸ் (J.Pபோதகர்)
மகள் -ரி.ஜோய் - (ஆசிரியை - யாழ்ப்பாணக்கல்லூரி)

### வைத்திலிங்கம் பகவதியம்மா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பகவதியம்மா நேற்று (03.05.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சற்குணம் (சிற்றிசன் ஸ்ரான்லி வீதி, யாழ். கொழும்பு), சிவநேசன் (ஓய்வுபெற்ற சமூகசேவை அத்தியட்சகர் அரச முதியோர் இல்லம் கைதடி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 04.05.2005 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாய்தருசன், மஞ்சவனப்பதி, கொக்குவில்.(4497I)(38-12-45-14)

தகவல் : க.வை.சிவநேசன், க.வை.சற்குணம்.

EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.